நோன்பின் முக்கியத்துவம் பக்கம் 3

காதியானும் அதன் புனித, வரலாறுச் சிறப்புமிக்க இடங்களும் (தொடர்-2) பக்கம் 5

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-16) பக்கம் 11

அஹ்மதிய்யத் உண்மை இஸ்லாம் (தொடர்ச்சி...) பக்கம் 15



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | April 2023 | Vol. 2 - Issue No. 5



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340


அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் ரமலானைப் பற்றிக் கேட்டபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், “யார் (ரமலான் மாதத்தின்) இரவில் நேர்மையான நம்பிக்கையுடனும், அல்லாஹ்வின் அருளை எதிர்பார்த்தும் துஆ செய்கிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்” என்று கூறினார்கள்.
(ஸஹீஹ் புகாரி, கிதாபுஸ் ஸலாத் அத் தராவீஹ்)





# திருக்குர்ஆன்

وَاِذَا سَاَلَكَ عِبَادِىْ عَنِّىْ فَاِنِّىْ قَرِيْبٌ ؕ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلْيَسْتَجِيْبُوْا لِىْ وَلْيُؤْمِنُوْا بِىْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ

(தூதரே!) என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் (அவர்களுக்கு) அருகில் இருக்கின்றேன்; பிரார்த்தனை செய்கின்றவர் என்னை அழைக்கின்றபோது நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் என் கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக). (2:187)




# ஹதீஸ்

عَنْ سَلْمَانَ، قَالَ قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ رَبَّكُمْ تَبَارَكَ وَتَعَالَى حَيِيٌّ كَرِيمٌ يَسْتَحْيِي مِنْ عَبْدِهِ إِذَا رَفَعَ يَدَيْهِ إِلَيْهِ أَنْ يَرُدَّهُمَا صِفْرًا

ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“நிச்சயமாக உங்கள் இறைவன் நாணமிக்கவனும், தயாளகுணமுள்ளவனும் ஆவான். அவன் தனது அடியான் தன்னிடம் (பிரார்த்தனை செய்தவாறு) கையேந்தும்போது அதனை வெறுங்கையாக திருப்பி அனுப்புவதற்கு வெட்கப்படுகின்றான். (அபூதாவூது, கிதாப் அல் வித்ர், ஹதீஸ் 1488)



# நோன்பின் முக்கியத்துவம்



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் ஏற்கனவே தொழுகையைப் பற்றி கூறியுள்ளேன். அடுத்த வரிசையில் இருப்பது நோன்பு வடிவிலான இறைவணக்கமாகும்.. இந்த நேரத்தில் தங்களை முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்ளும் சிலர் இந்த வழிபாட்டு முறைகளை மாற்றியமைக்க விரும்புவது வருத்தம் அளிக்கிறது. அவர்கள் குருடர்கள் ஆவர். மேலும் எல்லாம் வல்ல இறைவனின் முழுமையான ஞானத்தை அவர்கள் அறியவில்லை. இந்த வழிபாட்டு முறைகள் ஆன்மாவைத் தூய்மைப்படுத்த அவசியம் ஆகும். இந்த மக்கள் தங்களுக்குத் தெரியாத ஒரு துறையில் அபத்தமாகத் தலையிட முற்படுகின்றனர் மற்றும் தாங்கள் சென்றிராத ஒரு பகுதியின் முன்னேற்றத்திற்காக தவறான திட்டங்களை வகுத்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கை உலக விவகாரங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆன்மீக விஷயங்கள் குறித்து அவர்களுக்கு எந்த எண்ணமும் இல்லை. உண்ணுதல் மற்றும் குடிப்பதைக் குறைத்துக் கொள்வதும் பசி மற்றும் தாகத்தைத் தாங்கிக் கொள்வதும் ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவதற்கும் ஆன்மீகக் காட்சிகளைக் காணும் திறனை மேம்படுத்துவதற்கும் அவசியம் ஆகும். மனிதன் ரொட்டியால் மட்டும் வாழ்வதில்லை. மறுமை வாழ்வின் அனைத்து எண்ணங்களையும் நிராகரிப்பது இறை கோபத்தை வரவழைப்பதாகும்.




நோன்பு என்பது ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு ஒருவர் உணவு மற்றும் பானங்களைத் தவிர்க்க வேண்டும் என்று அர்த்தமல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நோன்பின் போது இறைவனை நினைவு கூர்வதில் அதிக ஈடுபாடு கொள்ள வேண்டும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரமலான் மாதத்தில் வணக்க வழிபாடுகளில் தம்மை மிகவும் ஈடுபடுத்திக் கொண்டார்கள். அந்த மாதத்தில் மனிதன் உண்ணுதல் மற்றும் குடிப்பதில் உள்ள ஆர்வத்தை கைவிட வேண்டும். மேலும் இந்தத் தேவைகளில் இருந்து விலகி தன்னை முழுமையாக இறைவனை நோக்கி வைத்துக் கொள்ள வேண்டும். உலகியல் ரொட்டி வழங்கப் பெற்று ஆன்மீக ரொட்டியில் கவனம் செலுத்தாதவர் துரதிர்ஷ்டசாலி ஆவார். உலகியல் ரொட்டி உடலைப் பலப்படுத்துகிறது. ஆன்மீக ரொட்டி ஆன்மாவை வளப்படுத்தி ஆன்மீகத் திறன்களை கூர்மைப்படுத்துகிறது. இறைவனின் அருளைத் தேடுங்கள் ஏனெனில் எல்லாக் கதவுகளும் அவனுடைய அருளாலே திறக்கப்படுகின்றன. (எஸென்ஸ் ஆ∴ப் இஸ்லாம் தொகுதி 2 பக்கம் 316)

இஸ்லாத்தின் மூன்றாவது தூண் நோன்பு ஆகும். இதன் சாராம்சத்தைக் குறித்து மக்களுக்கு இன்னும் தெரியவில்லை. உண்மை என்னவென்றால், ஒரு நிலப்பரப்பு அல்லது ஒரு மாநிலத்தைக் குறித்து அனுபவத்தால் அறியாத ஒருவரால் அவற்றின் நிலையை விவரிக்க இயலாது,

நோன்பு என்பதற்கு மனிதன் வெறுமனே உண்ணுவதையும் குடிப்பதையும் தவிர்க்க வேண்டும் என்று பொருள் அல்ல. அது மிகப் பெரிய நோக்கத்தைக் கொண்டுள்ளது. மேலும் அதன் விளைவை அனுபவத்தின் மூலம் மட்டுமே உணர முடியும். மனிதனின் உள்ளார்ந்த இயல்பு என்னவென்றால், ஒருவர் குறைவாக உட்கொள்வதால், ஆன்மா தூய்மையடைகிறது மற்றும் ஆன்மீக பலம் துரிதப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் நாம் ஒருவகையான உணவைக் குறைத்து மற்றொருவகை உணவை அதிகரிக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். நோன்பு நோற்பவர் பட்டினி கிடப்பது அதன் நோக்கம் இல்லை என்பதை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். பற்றறுதல் மற்றும் சுய கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்வதற்காக, நோன்பு நோற்பவர் இறைவனை நினைவு கூர்வதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு, மனிதன் ஒருவகையான (உடலுக்கு மட்டுமே ஊட்டமளிக்கும்) உணவிலிருந்து தன்னை மட்டுப்படுத்தி, ஆன்மாவைத் திருப்திப்படுத்தும் பிற உணவு வகைகளைப் பெற்றுக் கொள்வதே நோன்பின் சாராம்சம் ஆகும். வெறும் சடங்காக மட்டுமல்லாமல், இறை திருப்திக்காக மட்டுமே நோன்பு நோற்பவர்கள், இறைவனை துதி செய்வதிலும், இறைவனை நினைவு கூர்வதிலும் மற்றும் இறைவணக்கத்திலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும், இது இறுதியில் அவர்களுக்கு பிற வகையான ஊட்டச்சத்தை வழங்கி விடும். (மல்∴பூஸாத் தொகுதி. 5 பக்கம் 102)



# மகத்துவமிக்க 10 நாட்கள்

ஹஸ்ரத் நான்காவது கலீ.:பத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 75 -ல் அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''செயலைப் பொறுத்தவரை இறைவனிடத்தில் இந்தப் பத்து நாட்களைவிட (அதாவது ரமலானின் கடைசி பத்து இரவுகளை விட) மகத்துவமிக்க அன்பிற்குரிய நாட்கள் வேறு எதுவுமில்லை.''

அதாவது அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமான இரவுகள் வந்து கொண்டிருக்கின்றன. அல்லாஹ் -விடத்தில் இந்த நாட்கள் மகத்துவமிக்கவை ஆகும். இதன் பொருள் இந்த நாட்களில் அல்லாஹ் மற்றவர்களுக்கு மகத்துவத்தை வழங்குகின்றான். இந்த வகையில் இந்த நாட்கள் மகத்துவம் மிக்கவையாக உள்ளன. மற்றபடி, அல்லாஹ்வுக்கு குறிப்பிட்ட சில நாட்கள் மகத்துவமுள்ளவையாக எப்படி இருக்க முடியும்? மகத்துவமிக்க நாட்கள் என்றால், அவை மனிதனை மகத்துவமுள்ளவனாக்கும் நாள்களாகும். எனவே மகத்துவமிக்க இறைவனுடன் தொடர்பு அதிகமானால் அடியாரும் அத்துடன் மகத்துவம் உள்ளவராக மாறிக் கொண்டே செல்வார். எனவே இந்தப் பத்து நாட்களில் என்ன செய்ய வேண்டும் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவுரை கூறினார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

''இந்த நாட்களில் அதிகமாக தஹ்லீல் செய்யுங்கள்; தக்பீர் ஓதுங்கள்; தஹ்மீத் செய்யுங்கள்.''




தஹ்லீல் என்பது 'லாயிலாஹ இல்லல்லாஹ்' (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை) எனக் கூறுவதாகும். அதாவது, அல்லாஹ்வின் தவ்ஹீதை அதிகமாகப் பறைசாற்றுங்கள். எழும் போதும், உட்காரும் போதும், தூங்கும் போதும் விழித்தெழும் போதும் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற திக்ரை நாவில் உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டும். அந்த திக்ர் உள்ளத்தை உலுக்க வேண்டும். உண்மையிலேயே அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என மனிதன் உணர வேண்டும்.




உண்மையான மனதுடன் இந்த உணர்வு வரும்போது அடுத்து தக்பீர் தானாகவே உருவாகும். அல்லாஹு அக்பர் - அல்லாஹ் மிகப் பெரியவன். அவன் ஒருவன்தான் அனைவரையும் விடப் பெரியவன். மிகப் பெரியவனாக இருக்கும் இறைவனுடைய உண்மையான அடியராக மனிதன் மாறும்போது இறை நல்லடியார்களுக்குக் கிடைக்கும் அந்தப் பெருமை அம்மனிதனுக்கும் கிடைக்கும். இந்தப் பெருமை அனைவரையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது.




அதற்குப் பிறகு, தஹ்மீத் - அதாவது அல்ஹம்துலில்லாஹ் எனக் கூறுவது ஆகும். ஓரிறைக் கொள்கை, இறைவனின் மகத்துவம் ஆகிய இரண்டும் இருந்து விட்டால் உள்ளத்தில் இருந்து தம்மையும் அறியாமல் நன்றியுணர்வு வெளிப்படுகிறது. மனிதன் இறைவனுடைய ஏகத்துவத்தை ஒப்புக்கொண்டு அதனால் அவனுக்கு இறைவன் புறமிருந்து பெருமை கிடைத்து விட்டால் தன்னையுமறியாமல் அவனுடைய உள்ளத்திலிருந்து அல்ஹம்துலில்லாஹ் வெளிவருகிறது....

புகாரி நோன்பு என்ற பாடத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

*(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்...)*

# காதியானும் அதன் புனித, வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும்

2

தொகுப்பு: மவ்லானா முஹம்மது ஹமீது கவ்ஸர்
(அஹ்மதிய்யத் வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர், காதியான்)

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துகளின் ஒளியில் காதியானின் முக்கியத்துவம்

சய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காதியான் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:

1. "இறைவன் இந்த ஆள் நடமாட்டமில்லாத இடத்தை அதாவது காதியானை நகரங்கள் ஒன்று கூடும் இடமாக ஆக்கி விட்டான். ஒவ்வொரு நாட்டைச் சேர்ந்த மக்களும் இங்கு வந்து ஒன்று கூடுகின்றனர்." (நூல்: பராஹீனே அஹ்மதிய்யா பகுதி 5, ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 95)

2. "காதியான் ஓர் உண்மையான இடமாகும் என்று சூரியனைப் போன்று ஒளிர்ந்தவாறு காட்டும் ஒரு நாள் வரவிருக்கிறது." (நூல்: தா.்.பிவுல் பலா, ரூஹானீ கஸாயின் தொகுதி 18 பக்கம் 231)

3. "இந்த இடம் எந்த அளவுக்குக் குடியிருப்புள்ளதாகி விடும் என்றால், பியாஸ் நதி வரை மக்கள் வாழும் இடம் சென்று விடும்." (நூல்: தத்கிரா பதிப்பு 6 பக்கம் 666)

4. "நான் ஒரு கஷ்.்.பில் கண்டதாவது, காதியான் மகத்தான ஒரு பெரிய நகரமாக ஆகி விட்டது. அதன் கடைவீதிகள் கண்ணுக்கு எட்டும் தொலைவுக்கும் அப்பால் சென்று விட்டன. மிகவும் உயரமான இரண்டடுக்கு அல்லது நான்கடுக்கு மாடிகள் அல்லது அதை விடவும் அதிகமான உயரத்தில் அழகிய கட்டடங்களால் உருவாக்கப்பட்ட நீண்ட சந்தைகளைக் கொண்ட கடைகள் இருக்கின்றன. மிகப் பெரிய உடல் பருமனான சேட்மார்களும், மிகப் பெரிய வயிறுகளை உடையவர்களும் அமர்ந்திருக்கின்றனர். அவர்களால் கடைவீதி பொலிவு ஏற்படுகிறது. மேலும் அவர்களுக்கு முன்னால் சிவப்புக் கற்கள், மாணிக்கம், முத்துக்கள், வைரங்கள், வெள்ளிகள், தங்க நாணயங்கள் ஆகியவற்றின் குவியல் குவிந்து கொண்டிருக்கின்றன. மேலும் பலவகையான கடைகள் அழகிய பொருள்களின் மூலமாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. குதிரை வண்டிகள், இரட்டைக் குதிரை வண்டிகள், நான்கு சக்கரங்களைக் கொண்ட குதிரை வண்டிகள், பல்லக்குகள், குதிரைகள், பலவகை வாகனங்களிலும், நடைப் பயணமாகவும் ஒருவர் இன்னொருவரின் தோளுடன் தோளை உரசிக் கொண்டவாறு நெருக்கமாக கடைவீதிகளில் மக்கள் வந்து சென்று கொண்டு இருக்கின்றனர்." (நூல்: தத்கிரா 8-ஆவது பதிப்பு பக்கம் 343)

## புனிதமான இடங்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாகிய ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் சனோரீ (ரலி) அவர்கள் காதியான் வரும்போது தமக்கு ஏற்பட்ட தாக்கம் குறித்து இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்கள்:

"நான் காதியான் வந்திருக்கிறேன்............ இங்கு அவ்வப்போது எனக்கு உடனே திருக்குர்ஆனின் கருத்துகள் திறக்கப்படுகின்றன. மேலும் கருத்துகளைக் கொண்ட கட்டப்பட்ட ஒரு சிறிய மூடை (Packed bundle) எனது உள்ளத்தில் விழச் செய்யப்படுகின்றன என்பது போன்று நான் உணர்கின்றேன். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள், 'நமக்கு திருக்குர்ஆனின் ஞானங்களைக் கொடுத்துதான் அல்லாஹ்வால் நாம் நியமிக்கப்பட்டுள்ளோம். மேலும் இதற்குத் தொண்டு செய்வது நமது கடமையாக ஆக்கப்பட்டுள்ளது. எனவே நம்முடன் இருப்பதனாலும் இந்தப்



பயன்தான் கிடைக்க வேண்டும்' என்று கூறினார்கள்.'' (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 அறிவிப்பு எண்: 111 பக்கம் 90 பதிப்பு நஸாரத் நஷ்ரோ இஷாஅத், காதியான் 2008)

ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீ.்.ப் சாஹிப் ஷஹீது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“எவர் ஸலவாத் ஓதுகின்றாரோ, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அஹ்லே பைத்துடன் (வீட்டைச் சேர்ந்தவர்களுடன்) நேசம் கொள்கின்றாரோ, அவர்தான் காதியானில் நிம்மதியுடன் இருக்கின்றார். முபாரக் மஸ்ஜிதில் அல்லாஹ் மக்கா மற்றும் மதீனாவின் அருள்களை இறக்குகின்றான்.'' (அல் .்.பஸ்ல் இன்டர் நேஷனல் பத்திரிகை 11 ஜுலை முதல் 17 ஜுலை 2003)

வாசகர்கள் முந்தைய பக்கங்களைப் படித்ததன் மூலமாக காதியானிலுள்ள ஒவ்வோர் அணுவும் பரிசுத்தமானதும், கண்ணியத்திற்குரியதும் ஆகும் என்பதை கணித்திருப்பார்கள். இந்த காதியான் மூலமாக நிறைவேறிய, நிறைவேறிக் கொண்டிருக்கிற இந்த முன்னறிவிப்புகள் மட்டுமின்றி, இதன் மண்ணை ஏறக்குறைய 73 ஆண்டுகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலடிகள் முத்தமிட்ட மேன்மையையும், பெருமையையும் காதியான் பெற்றுக் கொண்டிருந்தது. மேலும் அவர்களின் மூச்சுக் காற்றுகள் இதன் வளிமண்டலங்களையும், காற்றுகளையும் நறுமணமுள்ளதாகவும், தூயதாகவும் ஆக்கிக் கொண்டிருந்தன. எந்நிலையிலும் காதியானின் அனைத்து பரிசுத்தமான, வரலாற்றுச் சிறப்புமிக்க, நினைவூட்டிக் கொண்டிருக்கின்ற இடங்களைப் பற்றி, இந்த சுருக்கமான பக்கங்களில் குறிப்பிடுவது சாத்தியமில்லை. வாய்ப்புக்கேற்ப சிலவற்றைப் பற்றிய குறிப்பு கீழே குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக, வாசகர்கள் துஆக்கள், ந.்.பிலான இறை வணக்கங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவதைப் பொருத்தவரை முக்கியமானவையாக இருக்கின்றவற்றின் மூலமாக பயன்பெறும் பொருட்டு, அவற்றைப் பற்றி குறிப்பிடுவதற்கு முதன்மை வழங்கப்பட்டுள்ளது. அதில் முதலாவதாக இருப்பது 'முபாரக் மஸ்ஜிது' ஆகும்.

## முபாரக் மஸ்ஜிது

வெளிப்படையாகப் பார்க்கும்போது, காதியானில் அக்ஸா மஸ்ஜிது இருக்கும் நிலையில், வேறு எந்த மஸ்ஜிதின் தேவையும் இருக்கவில்லை. ஏனெனில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் குறிப்பிட்ட சில எண்ணிக்கையில் இருந்த நபர்களைத் தவிர (முபாரக் மஸ்ஜிது ஆகிய) இதில் எந்த தொழுகையாளியும் இருந்ததில்லை. ஏனெனில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காலங்களுக்காக (அல்லாஹ்வால்) நியமிக்கப்பட்ட மனிதராக இருந்தார்கள். மேலும் மிகவும் அண்மையில் அவர்களிடம் அஹ்மதிய்யத்தின் அமைப்பு நிலைநாட்டப்பட இருந்தது. அவர்களின் கைகளால் இஸ்லாத்திற்கு ஆதரவாக உலக அளவில் எழுதுகோலின் மூலமாக போர் செய்யும் காலம் அண்மையில் வந்துவிட்டிருந்தது. எனவே ஹுஸுர் (அலை) அவர்களுக்கு ஏற்படவிருக்கும் மிகப் பரந்த ஞானம் மற்றும் ஆன்மீகப்



முபாரக் மஸ்ஜிது

பணிகளுக்காக அவர்களுடைய வீட்டின் மேற்புறத்திலுள்ள கதவுகளைக் கொண்ட ஓர் அறையை ஒட்டியவாறு இருக்கும் அப்படிப்பட்ட ஒரு 'பைத்துஸ் ஸிக்ர்' (இறைவனை நினைவு கூறும் இல்லம்) ஒன்று தேவைப்பட்டது. ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்விடம் இருந்து அதிக நற்செய்திகளுடன் ஒரு மஸ்ஜிதை உருவாக்குவதற்கான தூண்டுதல் உருவானது. அந்த மஸ்ஜிது, 'முபாரக் மஸ்ஜிது' என்று அழைக்கப்படுகிறது. அது இன்றும் முழுமையான கம்பீரத்துடனும், மகத்துவத்துடனும் காணப்படுகிறது. மேலும் உலகம் தழுவிய அளவில் பிரசித்தி பெற்றவாறு தாங்கி நிற்கிறது.

## முபாரக் மஸ்ஜிதின் கட்டுமானம்


(ஹஸ்ரத் பீர் சிராஜுத்தீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கண்கண்ட சாட்சிக்கு ஏற்ப) 1882-ஆம் ஆண்டில், ஹஸ்ரத் ஷேக் ய.்.கூப் அலிதராப் (ரலி) அவர்களின் ஆய்வுக்கு ஏற்ப 1883-ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் வீட்டின் மேல் தளத்திலுள்ள அறையுடன் ஒட்டியவாறு முபாரக் மஸ்ஜிதுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. உண்மையில் அதை விட வேறு பொருத்தமான எந்த இடமும் இருக்கவில்லை. ஏனெனில் 'பைத்துல் .்.பிக்ர்'-ன் பின்னால் தெரு இருந்தது. மேலும் தெருவுடன் ஒட்டி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சிறிய தந்தை மிர்ஸா குலாம் முஹ்யுத்தீன் அவர்களின் நிலப்பரப்பு இருந்தது. அதில் அவர்களின் குயவனின் பழைய கட்டடத்தின் பாழடைந்த பொருள்கள் கிடந்தன. மேலும் அதன் எஞ்சிய அடையாளங்களில் வடக்குத் திசையில் பாழடைந்தது போன்ற ஒரு சுவர் இருந்தது. ஹுஸுர் (அலை) அவர்கள் அதே சுவற்றிலும், அவர்களின் வீட்டின் தெற்கு சுவற்றிலும், தமது தோட்டத்தின் நாட்டு மரக் கட்டையால் மேல் தளத்தை ஆயத்தம் செய்தார்கள். செங்கற்கள் கிடைப்பதற்காக சில பழைய அடித்தளங்கள் தோண்டப்பட்டன. மஸ்ஜிதின் உற்புறமான பகுதி ஏறக்குறைய 9, அக்டோபர் 1883-ஆம் ஆண்டுக்குள் முழுமையடைந்து விட்டது. ஆனால் அதற்கு பின்னர்தான் வெள்ளையடிக்கப்பட்டது.

## பழைய மஸ்ஜிதின் உற்புறத் தோற்றம்

முபாரக் மஸ்ஜிதின் உட்புறமான கட்டடத்திற்கு மூன்று பகுதிகள் இருந்தன. முதலாவது மேற்குப் பகுதி இமாம் தொழ வைக்கும் இடமாகிய மூலையாக இருந்தது. அதன் மேற்கிலும், வடக்கிலும் இரண்டு ஜன்னல்களும், கிழக்கிலுள்ள சுவற்றில் ஒரு கதவும் இருந்தது. அது மரத்தலான பலகையால் மூடப்பட்டு ஒன்றிரண்டு நபர்கள் தனியாக அமருவதற்காக மிகவும் சுருக்கமான, ஆயினும் நிரந்தமான ஓர் அறையாக ஆகி விட்டது. (அது வடக்கும், தெற்குமாக 4 அடியும், 6 அங்குலம் பரப்பளவுக்குள்ளும், கிழக்கும், மேற்குமாக 4 அடியும், 7 அங்குலம் பரப்பளவுக்-குள்ளும் இருந்தது - நூலாசிரியர்.) நடுப்பகுதியில் தொழுகை-யாளிகள் 6 பேர்களைக் கொண்ட 2 வரிசைகளுக்கான இடம் இருந்தது. அந்தப் பகுதியிலேயே பைத்துல் ஃபிக்ர் செல்வதற்கு ஜன்னல் திறக்கும் வகையில் இருந்தது. எதிரில் இருக்கும் தெற்கிலுள்ள சுவற்றில் வெளிச்சத்திற்காக ஒரு ஜன்னல் வைக்கப்பட்டிருந்தது. மேலும் வெளியிலுள்ள கிழக்குப் பகுதியுடன் இணைப்பதற்காக ஒரு கதவு போடப்-பட்டிருந்தது. (இந்தப் பகுதியின் நீளம் கிழக்கும் மேற்குமாக 9 அடி, 11 அங்குலமாகவும், அகலம் வடக்கும், தெற்குமாக 7 அடி, 11 அங்குலமாகவும் இருந்தது - நூலாசிரியர்.)

மஸ்ஜிதின் கிழக்குப் பகுதி நடுப்பகுதியை விட சற்று பெரியதாக இருந்தது. அதாவது அதில் சில நேரங்களில் மூன்று பகுதிகளில் ஏறக்குறைய 15 பேர் தொழக் கூடியதாக இருந்தது. இந்தப் பகுதியிலிருந்து வெளியே ஒரு பக்கம் ஏணிப்படி இருந்தது. மறு பக்கம் தொழுபவர்களுக்கு ஒளு செய்வதற்காக இடமும் ஒரு குளியலறையும் உருவாக்கப்பட்டிருந்தது. அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கோடைக் காலங்களில் ஓய்வெடுத்தும் வந்தார்கள். மேலும் அதிலேயே சிவப்பு மைத்துளிகளின் அடையாளமும் வெளிப்பட்டது. கிழக்குப் பகுதியில் 3 வாயில்கள் இருந்தன. முதலாவது (வாயில்) வடக்கு சுவற்றில் இருந்தது. அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டுடன் இணைந்திருந்தது. இரண்டாவது (வாயில்) ஏணிப்படியிலிருந்து மஸ்ஜிது வரை நுழைவதற்காகவும், மூன்றாவது (வாயில்) குளியலறையின் பக்கம் இருந்தது. (இந்தப் பகுதியின் நீளம் கிழக்கும் மேற்குமாக 9 அடி, 4 அங்குலமாகவும், அகலம் வடக்கும், தெற்குமாக 7 அடி, 5 அங்குலமுமாக இருந்தது - நூலாசிரியர்.) மஸ்ஜிதின் இரண்டு வாசல்களிலும் إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ (இன்னத்தீன இந்தல்லாஹில் இஸ்லாம் - நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் ஆகும்) என்ற (3:20) வசனமும், சலவாத்தும், மஸ்ஜிது தொடர்பான இல்ஹாமும் குறிப்பிடப்பட்டிருந்தன. முபாரக் பள்ளிவாயில் கட்டிய பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அக்ஸா பள்ளிவாயிலுக்குப் பதிலாக முபாரக் பள்ளிவாயிலில் தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். துவக்க காலத்தில் பெரும்பாலும் அவர்களே பாங்கு கூறி வந்தார்கள்; அவர்களே இமாமத்தும் செய்து வந்தார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கேற்ப (பழைய) முபாரக் மஸ்ஜிதின் உட்புறமான பகுதியின் வரைபடம் இதுவாகும்:




## முபாரக் மஸ்ஜிதின் விரிவாக்கம்

முபாரக் மஸ்ஜிதின் இந்த துவக்கக் கட்டடம் 24 ஆண்டுகள் வரை தனது நிலையில் வழக்கத்தின்படி அப்படியே நிலைத்திருந்தது. அதன் இடைப்பட்ட காலத்திலேயே ஒன்றிரண்டு அடி பள்ளத்தில் அமைந்திருந்த சிவப்பு நிறத் துளிகளின் அடையாளத்தைக் கொண்டுள்ள அறை முபாரக் மஸ்ஜிதின் பொதுவான பரப்பளவுக்கு சமமாக ஆக்கப்பட்டு விட்டது. பின்னர் 1907-ஆம் ஆண்டில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மாமனாரான ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் சாஹிப் அவர்களின் கண்காணிப்பில் தெற்குப் பகுதியில் முதல்முறையாக விரிவாக்கம் செய்யப்பட்டது. அதன் மேற்கிலுள்ள மூலையில் இருந்த மினார் நிலைபெற முடியாது போயிற்று. முபாரக் மஸ்ஜிதின் இரண்டாம் முறையான விரிவாக்கம், இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் 1944-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முழுமையடைந்தது. அதன் மூலமாக மஸ்ஜிதின் 1907-ஆம் ஆண்டின் கட்டடத்தை

விட தனது அகலத்திலும், விசாலத்திலும் இரண்டு மடங்கு ஆகிவிட்டது. இந்த முறை கட்டடப் பணியின் கண்காணிப்பை ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். (தாரீக்கே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 220 காதியான் பதிப்பு 2007)


## மஸ்ஜிதின் மேல் மாடி

முபாரக் மஸ்ஜிதின் பழைய பகுதியின் நான்கு மூலைகளின் மீதும் நான்கு சின்னஞ்சிறிய மினார்கள் இருந்தன. மேலும் அங்கு சென்றடைவதற்கு சிவப்புத் துளிகள் பட்ட அறையின் மேல் தளத்தில் ஏறுகின்ற ஓர் ஏணிப்படி வைக்கப்பட்டிருந்தது. ஜமாஅத் நிலைநாட்டப்பட்ட பிறகு ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி), ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் (ரலி) மற்றும் ஜமாஅத்தின் மற்ற சான்றோர்கள் காதியான் ஹிஜ்ரத் செய்து வந்தபோது அதன் மேற்குப் பகுதியில் அமரும் இடம் அமைக்கப்பட்டது. அங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மக்ரிப் தொழுகைக்குப் பிறகு தமது தொண்டர்களுக்கு மத்தியில் கலந்து கொண்டு அமர்ந்தார்கள். மேலும் அறிவு, இறைஞானம் எனும் முத்துகளைத் தூவி வந்து கொண்டிருந்தார்கள். தூயதும், ஆன்மாவை வளர்க்கக் கூட்டியதுமான இந்தக் கூட்டம், 'தர்பாரே ஷாம்' (சிரியாவின் அரசவை) எனும் அன்பான பெயரால் நினைவூட்டப்படுகிறது. (தாரீக்கே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 219-220, காதியான் பதிப்பு 2007)

இந்த அருளுக்குரிய மேல் மாடி தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்கவையும், ஈமானை ஒளியூட்டக் கூடியவையுமான சில நிகழ்வுகளையும் குறிப்பிடுகிறோம்:

1. அன்பிற்குரிய எஜமானராகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் உண்மைக்காக ரமலான் மாதத்தில் சூரிய, சந்திர கிரகணம் ஏற்படுவதை அவர்களின் தோற்றத்திற்கு அடையாளமாக முன்னறிவித்திருந்தார்கள். இந்த முன்னறிவிப்பிற்கு முற்றிலும் ஏற்ப ஹிஜ்ரி 1311-ஆம் ஆண்டு ரமலான் மாதம் 13-ஆம் இரவில் அதாவது கி.பி. 1894-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21-ஆம் இரவில் சந்திரனுக்கு கிரகணம் ஏற்பட்டது. மேலும் ஹிஜ்ரி 1311-ஆம் ஆண்டு ரமலான் மாதம் 28-ஆம் நாளில் அதாவது கி.பி. 1894-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ஆம் நாள் சூரியனுக்கு கிரகணம் ஏற்பட்டது. எந்த இமாம் மஹ்தி (அலை) அவர்களுக்காக இந்த மகத்தான அடையாளம் வெளிப்பட்டதோ அவர்கள் இந்த முபாரக்





மஸ்ஜிதின் மேள்தளத்திலிருந்து சூரிய கிரகணத்தைக் கண்டார்கள் என்ற நற்பேறும், நற்பயக்கியமும் இந்த மஸ்ஜிதுக்குக் கிடைத்தது. இதன்படி, ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இது தொடர்பாகக் குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகிறார்கள்:

"இன்று கண்டிப்பாக - ஆம் - கண்டிப்பாக சூரியனுக்கு கிரகணம் ஏற்பட வைக்கப்படும் என்றும், இந்த விஷயம் நிகழாமல் போய் விடுவது என்பது சாத்தியமில்லை என்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு முழுமையான, உறுதியான நம்பிக்கை இருந்தது. அவர்கள் (அலை) முபாரக் மஸ்ஜிதின் மேல் தளத்தில் முழு ஏற்பாடு செய்திருந்தார்கள். மேலும் மிக ஆர்வத்துடன் வரும் பார்வையாளர்கள், அருகில் வாழ்ந்த மிகவும் அன்பு கொண்ட தொண்டர்கள், சஹாபிகள் அனைவரும் மஸ்ஜிதின் மேல் தளத்தில் ஒன்று சேர்ந்திருந்தனர்.

சூரிய, சந்திர கிரகணத் தொழுகையைத் தொழுவதற்கும், சூரிய கிரகணத்தின் காட்சியைக் காண்பதற்கும் முழுமையான ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பதற்காக அந்த நாளில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆயத்தம் செய்தார்கள். இதில் கொஞ்சமும் சந்தேகம் இருந்ததில்லை. அவர்கள் (அலை) தமது சஹாபிகளுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் மூழ்கியிருந்தார்கள். அதற்குள் ஒரு நண்பர் ஓடியவாறு வந்து, சூரிய கிரகணம் ஏற்பட்ட நற்செய்தியைக் கூறி விட்டார். அவர், 'காலத்தின் மஸீஹ் (அலை) அவர்களே! சூரிய கிரகணம் ஏற்பட்டு விட்டது என்றும், இக்காலத்திற்கான மஹ்தி (அலை) அவர்களே! உமக்காக ஒரு முழுமையான அடையாளம் நிறைவேறி விட்டது' என்றும் கூறினார்." (ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 31, ஆகஸ்டு 1994-ஆம் ஆண்டு பிரித்தானிய ஆண்டு மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு)

2. "டாக்டர் அப்துஸ் ஸத்தார் சாஹிப் (ரலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒருமுறை டாக்டர் அப்துல்லாஹ் சாஹிப் அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: நான் ஒருநாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், தாங்கள் எப்போதாவது வானவர்களையும் பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டேன். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு முபாரக் மஸ்ஜிதின் மேல் தளத்தில் தம் தோழர்களுடன் அமரும் இடத்திற்கு வலப் பக்கத்திலுள்ள மினாராவுக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள்.

அப்போது அவர்கள் (அலை), 'இந்த மினாராவுக்கு முன்னால் இரண்டு மலக்குகள் எனக்கு முன்னால் வந்தார்கள். அவர்களிடம் இரண்டு இனிப்பான ரொட்டிகள் இருந்தன. அவர்கள் அந்த ரொட்டிகளை எனக்குக் கொடுத்தனர். ஒன்று உமக்காக; இன்னொன்று உமது தோழர்களுக்காக எனக் கூறினர்' என்று கூறினார்கள்.'' (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 778-779 ரிவாயத் எண்: 885 பதிப்பு காதியான் 2008)

3. ''ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ரோம் நாட்டின் தூதுவராகிய ஹுசைன் காமீ என்பவர் இரவில் இஷா நேரத்துக்கு அருகில் காதியான் வந்த அந்த நாளில் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் (தம் தோழர்களுடன்) அமரும் இடத்தில் தோழர்களுடன் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு தலைசுற்று ஏற்பட ஆரம்பித்தது. மேலும் அவர்கள் (அலை) அமரும் இடத்திலிருந்து கீழே இறங்கி தரையில் படுத்து விட்டார்கள். சிலர் ஹுஸூர் (அலை) அவர்களின் உடலை அமுக்கத் துவங்கினர். ஆனால் ஹுஸூர் (அலை) அவர்கள் கொஞ்ச நேரத்தில் அனைவரையும் விலக்கி விட்டார்கள். பெரும்பாலான நண்பர்கள் அங்கிருந்து சென்று விட்டனர். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள், மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களிடம், திருக்குர்ஆனிலிருந்து கொஞ்சம் ஏதாவது ஓதுங்கள் என்று கூறினார்கள். மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள், நீண்ட நேரம் மிகவும் அழகிய குரலில் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார்கள். எதுவரையெனில், ஹுஸூர் (அலை) அவர்களுக்கு குணம் கிடைத்து விட்டது.'' (சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பகுதி 2 பக்கம் 439 ரிவாயத் எண்: 462 பதிப்பு காதியான் 2008)

(தொடரும்...)

*(4 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

''ரமலான் தனது கடைசி பத்து நாட்களில் நுழையும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்ற நாட்களில் செய்வதை விட மிக அதிகமாக முயற்சி செய்வார்கள். தமது இரவுகளை விழிப்பூட்டுவார்கள். தமது குடும்பத்தினரையும் இறைவணக்கத்திற்காக விழிப்பூட்டுவார்கள்.''

இறைவணக்கத்திற்காக குடும்பத்தினரை விழிப்பூட்டுவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பொதுவான பழக்கமாக இருந்தது. மேலும் அன்னாரின் இரவுகளோ எப்பொழுதும் உயிருள்ளவையாகவே விளங்கின. அதில் மேலும் அதிக முயற்சி, மேலும் அதிக உழைப்பு செய்ததாக இந்த ஹதீஸில் வந்துள்ளது. எனவே ஏற்கனவே தஹ்ஜ்ஜுத் தொழுபவர்கள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். முன்னர் நிறைவேற்றிய தஹஜ்ஜுதில் இல்லாத விஷயம் இந்த நாட்களில் அவர்களுடைய தஹஜ்ஜுதில் உருவாக வேண்டும். ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தஹஜ்ஜுதில் எல்லாம் இருந்தன. அப்படியிருந்தும் அன்னார் இந்தப் பத்து இரவுகளில் சிறப்பாக உழைத்தார்கள். அதற்குக் காரணம், இன்னீ கரீப் (நிச்சயமாக நான் அருகில் இருக்கின்றேன்) என்ற இறைவனுடைய வாக்குறுதிதான்.

இறைவன் அருகில் இருந்தும் ,மேலும் அருகில், மேலும் அருகில் இருப்பதாக வாக்குறுதி கொடுக்கின்றானே, இதற்கு என்ன பொருள்? இதன் பொருள், அல்லாஹ்வுடைய நெருக்கம் எல்லையற்றது. நாம் அல்லாஹ்வை நெருங்கி விட்டோம். போதும் அவ்வளவுதான் என்ற சிந்தனையை உள்ளத்திலிருந்து எடுத்து விடுங்கள். இறைநெருக்கத்தின் அடுத்த கட்டத்தைப் பெற முடியாது என்ற அளவு வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூட இறைவனை நெருங்கவில்லை.

அப்படி இருந்தால் இறைவனும் ஒரு நிலையில் சென்று முடிந்து விடுபவனாகி விடுவான். ஹஸ்ரத் நபிகள்



நாயகம் (ஸல்) அவர்களும் இறைவனை நோக்கிய பயணத்தில் ஓர் இடத்தில் சென்று நின்று விடக் கூடியவர்களாக இருந்திருப்பார்கள். ஆனால் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வெளிப்பட்ட இறைவன் ஓரிடத்தில் நின்று விடக்கூடிய இறைவனல்லன். இறை நெருக்கமும் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே செல்கிறது. இதை விட அதிமாக இறை நெருக்கம் இனி இல்லை என மனிதன் கருதும் போது இறைவனின் மேலும் அதிக இறை நெருக்கத்தை மனிதன் காண்கிறான். இந்த இறை நெருக்கத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வளர்ந்து கொண்டே சென்றார்கள். இறை நெருக்கத்தின் குறிப்பிட்ட இடத்தை அடைந்து அவர்கள் நின்று விட்டார்கள் என எவரும் கூற முடியாது. எனவே மேலும் மேலும் அதிக இறை நெருக்கத்திற்கான வாக்குறுதியை இறைவன் அன்னாருக்கு வழங்கினான். மற்ற தஹஜ்ஜுத் தொழுபவர்களுக்கும், இறை வழிகளைத் தேடுபவர்களுக்கும் இதில் பெரிய அறிவுரை உண்டு. அதாவது, அவர்கள் மேலும் மேலும் இறை நெருக்கத்தை தேடிக் கொண்டே இருக்கட்டும்!

(ஜுமுஆ குத்பா 08.01.1999)

## “எவர் மார்க்கத்திற்காக சேவை செய்வதில் இன்பம் காணவில்லையோ அவர்களிடம் இறைவன் ஒருபோதும் வரமாட்டான்”

ஒரு நபியால் உருவாக்கப்பட்ட ஜமாஅத் விருப்பத்துடன் நோன்பு வைப்பது போன்றே, விருப்பத்துடன் தியாகமும் செய்ய வேண்டும். நோன்பின்போது பசித்தும், தாகத்துடனும் இருக்க வேண்டியுள்ளது. எனினும் நோன்பு வைப்பதில் சிறுவர்களுக்குக் கூட ஆர்வம் இருக்கிறது. ஆனால் சாதாரண நாட்களில் சாப்பாடு தயாராக கொஞ்சம் தாமதமானால் போதும் சிறுவர்கள் கூச்சலிட ஆரம்பித்து விடுவார்கள். அதே சமயத்தில் நோன்பு வைக்க வேண்டாம் என்று சொல்லிப்பாருங்கள். அப்போதும் அழுவார்கள். காரணம், நோன்பினால் பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதை அச்சிறுவர்கள் காணுகிறார்கள். எனவே அவர்களும் பசித்திருப்பதால் மகிழ்ச்சி அடைகிறார்கள். நோன்பிலும், பசியுடனும் தாகத்துடனும்தான் இருக்கிறோம் என்றாலும் அது மனமுவந்து தாமாக விரும்பி செய்வதால் அது நமக்கு ஆனந்தத்திற்குக் காரணமாக இருக்கின்றது.



இதே போன்று வெளிப்படையாகப் பார்க்கும் போது நபிமார்களின் வருகையினால் அவர்கள் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்குத் துன்பங்கள் வருகின்றன. அவர்கள் தம் செல்வத்தையும், கௌரவத்தையும், உற்றார் உறவினர்களையும், நண்பர்களையும் எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டியுள்ளது. இவை வெளிப்படையில் துன்பங்களாக தென்பட்டாலும் உண்மையில் அவை நோன்பினால் ஏற்படும் கஷ்டங்களைப் போன்றதாகும். நோன்பு நாட்களில் பசியினாலும் தாகத்தினாலும் நோன்பாளியின் உடல் உருகிப் போகின்ற அதே வேளையில் அவர்களின் கண்களுக்கு முன்னால் பெருநாளின் பிறையும் ஒடிக் கொண்டிருக்கிறது.

இதே போன்று இக்காலத்தின் இமாமை ஒப்புக் கொண்ட நம் ஜமாஅத்தும் தியாகங்களை இதே கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். ரமலானின் நோன்பை துன்பமாகக் கருதாது, அதில் இன்பம் காண்பதைப் போன்றே மார்க்கத்தைப் பரப்புவதிலும் இஸ்லாத்திற்காக தொண்டாற்றுவதிலும் நாம் மேற்கொள்ளும் தியாகங்களிலும் நாம் இன்பம் காண வேண்டும். இதனால் ஏற்படும் இன்னல்கள் நோன்பு வைக்கும் போதும், ஹஜ் செய்யும் போதும் ஏற்படும் இன்னல்களைப் போன்றது என்றும் அதன் விளைவாக மகிழ்ச்சி எனும் பெருநாள் கண்டிப்பாக வரவிருக்கிறது என்றும் உறுதி கொள்ள வேண்டும்.

அவ்வாறு அந்தப் பெருநாள் இவ்வுலகில் நமக்கு வராவிட்டால் ஷஹீதாகும் பாக்கியம் நமக்குக் கிடைக்கும். இறைவழியில் உயிர் நீக்கும் நாளும் நமக்கு பெருநாள்தான். எனவே தியாகம் செய்வதற்கு நம்பிக்கை கொண்டவர்கள் பயப்படக் கூடாது. ஏனெனில் தியாகங்கள் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கின்றனவே தவிர அழிவுக்குக் காரணமாக இருப்பதில்லை.

ஆனால் இத்தகு தியாகங்கள் ஒரு மனிதனை மகிழ்விப்பதற்காகவோ அல்லது மக்களிடமிருந்து பாராட்டைப் பெற வேண்டும் என்பதற்காகவே ஒருவர் செய்கின்றார் என்றால் அவர் தம் தியாகங்களை வீணாக்கி விடுகின்றார். மார்க்க வழியில் செய்யும் தியாகங்கள் எவ்வளவு மகத்தானது என்றால் அதற்குரிய கூலியை அல்லாஹ்வையன்றி வேறு எவராலும் கொடுக்க முடியாது.

ஒவ்வொரு செயலுக்கென்றும் நற்கூலி இருக்கின்றது. ஆனால் ரமலான் நோன்பிற்குரிய கூலி நானாகவே இருக்கின்றேன் என்று இறைவன் கூறியதாக ஹதீஸே குத்ஸியில் வந்துள்ளது. இந்தக் கருத்து திருக்குர்ஆனில் எங்கே எழுதப்பட்டுள்ளது என்று எவராவது கேட்கலாம். அதற்குப் பதில், ஆம்! திருக்குர்ஆனிலும் இந்தக் கருத்து எழுதப்பட்டுள்ளது என்பதேயாகும். இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:


ரமலானைப் பற்றி கூறிய பிறகு இறைவன் கூறுகின்றான்: “ரமலானில் என் அடியார் என்னிடம் துஆ செய்யும் போது நான் அவர்களின் அருகில் சென்று அவர்களின் துஆக்களைக் கேட்கின்றேன்.”

அடுத்து, பிறையைப் பார்ப்பது இறைவனை கண்டதற்கு உதாரணமாக நபிமொழியில் வருணிக்கப்படுகிறது. நபிமொழியில் வருவதாவது, நபித்தோழர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் யா ரஸூலல்லாஹ்! கியாம நாளில் எவ்வளவு கூட்டம் இருக்கும்? அப்போது நாம் இறைவனை எப்படி பார்க்க முடியும் எனக் கேட்டார்கள். இதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், “நீங்கள் பிறையைப் பார்ப்பதில்லை? அப்போது கூட்டமாக இருந்தாலும் முதல் நாள் பிறையைப் பார்க்க முடிகிறதுதானே” என்று பதிலளித்தார்கள்.

சுருக்கமாக இறைவனுக்காக செய்யப்படும் தியாகங்களுக்கு இறைவனே பிரதிபலனாகக் கிடைக்கின்றான். எனவே மார்க்க விஷயத்திற்காக நாம் சகிக்கின்ற துன்பங்களுக்கு உரிய பிரதிபலனை எந்த மனிதனாலும் கொடுக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால் இறைவனுக்காக மேற்கொள்ளப்பட்ட தியாகங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கூட எந்த பிரதிபலனையும் தர இயலாது என்று நாம் கூறினால் அதில் எவ்வித அவமரியாதையும் இல்லை. மாறாக, அதில் பெருமைதான் இருக்கிறது என்பதே என் கருத்து. ஏனென்றால் எந்த செயலுக்கு இறைவனே நற்கூலியாக இருக்கிறானோ அந்த நற்செயலுக்கு ஒரு மனிதர் அவர் எவ்வளவு மேலான மகத்துவமுடையவராக இருப்பினும் நற்கூலியாக ஆக முடியாது.

ஆகவே, உண்மையான தியாகம் இல்லாமல் பெருநாள் இல்லை. நோன்பை ஒரு வீணான செயலாக நினைத்து அதனை பேணாதவருக்கென்று எந்தப் பெருநாளும் இல்லாததைப் போன்றே மார்க்கத்திற்காக தியாகம் செய்ய வேண்டும் என்று உண்மையாகவே ஆர்வம் இல்லாதவர்களுக்கும் எந்தப் பெருநாளும் கிடையாது. மேலும் எவர் மார்க்கத்திற்காக சேவை செய்வதில் இன்பம் காணவில்லையோ அவர்களிடம் இறைவன் ஒருபோதும் வரமாட்டான்.

**(ஈத் குத்பா 13.09.1929)**



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

16

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

## ஷஹ்னயே ஹக்

1886–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 'ஷஹ்னயே ஹக்' என்ற நூலை எழுதி வெளியிட்டார்கள். இந்தப் பணிக்காக அவர்கள் அமிர்தசரஸ் சென்றார்கள். அங்கு அவர்கள் முன்ஷீ முஹம்மது உமர் வீட்டில் தங்கினார்கள். இந்நூலில் அவர்கள் தமது எதிரிகளால் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு விளக்கம் அளித்தார்கள். அவர்களின் எதிரிகள் பல பொய்களையும், கட்டுக் கதைகளையும் அவிழ்த்து விட்டிருந்தார்கள். அவர்கள் வெளியிட்ட தகவல்களின்படி, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பெரும் கடன் சுமைகளில் மூழ்கியிருந்தார்கள். கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்தார்கள். ஆர்ய சமாஜ நூல்களைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. பணம் சம்பாதிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்று கூறியிருந்தார்கள். வேதங்களின் அதிகாரப்பூர்வமான மொழிபெயர்ப்பை சமாஜத்தினர் வெளியிட வேண்டுமென்றும், அதன் மூலம் மக்கள் அதன் தன்மையைப் புரிந்து கொள்வார்கள் என்றும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அவை பழமையான நூல்களாக இருக்கலாம். அதன் காரணமாக அவை சிறந்த வேத நூல்கள் என்று கூற முடியாது. வேதங்கள் கூறும் இறைக்கோட்பாடு மிகப் பழமையானதும், முழுமையற்றதுமாகும். நெருப்பு, காற்று, நீர் போன்றவற்றின் வழிபாட்டை வேதங்கள் கூறுகின்றன என்பதை எடுத்துக் காட்டும் தெளிவான சான்றுகளை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எடுத்து வைத்தார்கள். உயர்ந்த ஜாதி ஹிந்துவோடு விபச்சாரத்தில் ஈடுபடும் தாழ்ந்த ஜாதி ஹிந்து கொல்லப்பட வேண்டும் என்றும், அதே நேரத்தில் அந்தச் செயலில் ஈடுபடும் ஒரு பிராமணன் தப்பித்துக் கொள்ளலாம் அல்லது அபராதம் செலுத்தினால் போதுமென்று கூறும் மனு தர்ம வசனங்களையும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். வேதத்தைச் செவியுறும் ஒரு சூத்திரனின் காதுகள் உருகிய ஈயத்தாலோ, மெழுகாலோ மூடப்பட வேண்டும். அவனுடைய நாக்கு வெட்டப்பட வேண்டும். அவனுடைய இதயம் வெட்டி எறியப்பட வேண்டும் என்ற வேத வசனங்களையெல்லாம் எடுத்து வைத்தார்கள். (ஆதாரம்: கவுதம் ஸ்மிருதி, அஷ்டதாஷ் ஸ்மிருதி காண்க)

பண்டிட் லேக்ராம் தக்ஸீபே 'பராஹீனே அஹ்மதிய்யா' என்ற தமது நூலில் எழுப்பியிருந்த சில கேள்விகளுக்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பதிலளித்தார்கள். அவருடைய அறியாமையை வெளிப்படுத்தும் விதமாக அவருடைய வாதங்களிலிருந்த குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார்கள். தாம் இன்னொரு முக்கியமான நூல் எழுதும் பணியில் ஈடுபட்டிருந்ததால் பண்டிட் லேக்ராமின் நூலுக்கு முழுமையாக மறுப்பு எழுதும் பொறுப்பை தமது நண்பரான மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்–தார்கள். மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்கள் தஸ்தீகே பராஹீனே அஹ்மதிய்யா என்னும் தலைப்பில் மிகச் சிறந்த மறுப்புரை ஒன்றை (1890 –ஆம் ஆண்டு) எழுதினார்–கள். அதில் விழுந்த அடியால் பண்டிட் லேக்ராம் செயலற்றுப் போனார்.



பண்டிட் லேக்ராம்

## கிறிஸ்தவர்களின் எதிர்ப்பு

1887–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20–ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார்கள். அதில் தாம் முன்னரே 1885–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5–ம் தேதி தமது உறவினர் ஒருவரின் குடும்பத்தைத் துன்பம் பீடிக்கும் என வெளியிட்டிருந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். 1887–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7–ம் நாள் முதலாவது பஷீர் பிறந்தார்கள். தாம் 1886–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8–ம் தேதி தமக்குப் பிறக்கப் போகும் ஆண்

மகனைப் பற்றி செய்திருந்த முன்னறிவிப்பு நிறைவேறிவிட்ட –தைத் தெரிவித்து ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வெளியிடும் முன்னறிவிப்புகள் அப்படியே நிறைவேறுவதைக் கண்டு கிறிஸ்தவர்கள் கலக்கமடைந்தனர். ரெவரெண்டு இமாமுத்தீன், ரெவரெண்டு தக்கார் தாஸ், ரெவரெண்டு அப்துல்லாஹ் ஆத்தம் போன்ற பாதிரிமார்கள். 19.03.1885, 02.04.1885, 16.04.1885 ஆகிய தேதிகளில் வெளிவந்த 'நூர் அஃப்ஷான்' என்ற தமது பத்திரிகையின் இதழ்கள் வாயிலாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் பெருகி வரும் ஆதரவைப் பற்றி மக்களை எச்சரித்தனர். அன்னார் (அலை) எழுதிய சுர்மா சஷ்மயே ஆர்யா என்னும் நூல் ஆர்ய சமாஜிகளின் கொள்கைகளை முறியடித்தது. அடுத்தது தங்களின் முறை எனக் கிறிஸ்தவர்கள் அஞ்சினர். 1885–ஆம் ஆண்டு அவர்கள், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் பிரசாரத்திற்கு எந்த விதமான முக்கியத்துவமும் கொடுக்காதவர்களாக இருந்த போதிலும் 1887–ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் தொடர்ச்சியாக பல கட்டுரைகளை எழுதினர். இந்தக் கட்டுரைகளின் விளைவாக கிறிஸ்தவ சமுதாய மக்கள் மத்தியில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீது வெறுப்புணர்வு ஏற்பட்டது.



1888–ஆம் ஆண்டு மே மாதம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பட்டாலா நகருக்குச் சென்றார்கள். நோய்வாய்ப்பட்டிருந்த தமது மகன் முதலாம் பஷீர் அவர்களின் மருத்துவ சிகிச்சைக்காக அங்கு சென்றிருந்தார்கள். அங்கு நபீ பக்ஷ் தைல்தார் என்பவரின் இல்லத்தில் தங்கியிருந்தார்கள். மே 18–ஆம் தேதி ஒரு வெள்ளிக்கிழமை அன்று ஃபத்ஹே மஸீஹ் என்னும் கிறிஸ்தவப் பாதிரி அங்கு வந்தார். இந்துக்களும் முஸ்லிம்களுமாக சுமார் 50 பேர் அடங்கிய ஒரு கூட்டத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் போலவே தம்முடைய பிரார்த்தனைகளும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன வென்றும், எதிர்காலத்தைப் பற்றிய செய்திகள் அடங்கிய இறையறிவிப்பு –களைத் தாமும் பெறுவதாகவும் அவர் கூறினார். இந்த விஷயத்தில் தம்மோடு போட்டிபோட முடியுமா என அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு சவால் விடுத்தார். இருவரும் தத்தமது முன்னறிவிப்புகளை லூதியானாவிலிருந்து வெளிவரும் 'நூர் அஃப்ஷான்' என்னும் கிறிஸ்தவப் பத்திரிகையில் வெளியிட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். 1888–ஆம் ஆண்டு மே மாதம் 21–ஆம் தேதி திங்கள்கிழமை இதற்குரிய நாளாக நிர்ணயம் செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்திற்கான நேரம் காலை 10.00 மணி எனக் குறிக்கப்பட்டது.

குறிக்கப்பட்ட அந்த நேரத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், பாதிரி ஃபத்ஹே மஸீஹ் ஆகியோர் வெளியிட விருக்கும் முன்னறிவிப்புகளைக் கேட்பதற்காக இந்துக்களும், முஸ்லிம்களும் பெருமளவில் ஒன்று கூடியிருந்தனர். ஆனால் அனைவரையும் ஏமாற்றம் அடையச் செய்யும் விதத்தில் பாதிரி ஃபத்ஹே மஸீஹ் சம்பந்தமில்லாத வேறு விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். அங்கு கூடி இருப்பதன் நோக்கம் என்ன வென்பதை அனைவரும் அவருக்கு நினைவுபடுத்தினார்கள். ஏற்கனவே கூறியபடி முன்னறிவிப்புகளை வெளியிடும்படி அங்கு கூடியிருந்த பொதுமக்கள் அவரை வற்புறுத்தினர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் போன்றே தமக்கும் ஆற்றல் இருப்பதாக ஃபத்ஹே மஸீஹ் கூறியதை முன்ஷீ முஹம்மது பக்ஷ் முக்தார் என்பவர் உறுதி செய்தார். இதனை அவர் ரெவரெண்டு ஹெர்பெர்ட் உட்னி வீட்டிபிரஷ்ட் ஸ்டேன்டன் என்ற பட்டாலாவைச் சேர்ந்த கிறிஸ்தவப் பிரசாரகருக்கு எழுதிய கடிதத்திலும் குறிப்பிட்டார். இதற்கு பதிலளிக்கும்போது ஃபத்ஹே மஸீஹ் தாம் இறைவெளிப்பாடுகளைப் பெறுகிறேன் என்ற அர்த்தத்தில் கூறவே இல்லை என்று கூறினார். அஹ்மது (அலை) அவர்களின் கூற்றில் உண்மை இல்லை எனத் தாம் கருதியதால், தாம் மேம்போக்காக அவ்வாறு கூறியதாகக் கூறினார். பட்டலாவைச் சேர்ந்த ஹிந்துப் பிரமுகரான ராய் பஷம்பர் தாஸ் என்பவரும், பாபு குர்ஷீது சிங் முக்தார் என்பவரும், பொய்யான வாதத்தை முன் வைத்த கிறிஸ்தவ பாதிரியை பொது மக்கள் மத்தியில் கண்டித்தனர். இவ்வாறு அவர் பொதுமக்களின் இழிவுக்கு ஆளானார்.

1888–ஆம் ஆண்டு மே 24–ஆம் தேதி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் குர்தாஸ்பூரில் உள்ள ஷம்சுல் ஹிந்து என்ற அச்சகத்தில் அச்சிடப்பட்ட பிரசுரம் ஒன்றை வெளியிட்டார்கள். அதில் தாம் ரமலான் மாத இறுதி வரை பட்டாலாவில் தங்கி இருப்பதாகவும், அதற்குள் ஐரோப்பிய கிறிஸ்தவப் பாதிரி எவராவது ஒருவர் இந்த நோக்கத்திற்காக முன் வந்தால் தாம் வரவேற்பதாகவும் அறிவித்திருந்தார்கள். அந்நேரம் அங்கு கிறிஸ்தவ அமைப்பின் பொறுப்பாளராக இருந்த ரெவரெண்டு ஸ்டேண்டன் என்பவரைக் குறிப்பாக அழைத்திருந்தார்கள். கிறிஸ்தவர்களுக்கு அப்படிப்பட்ட ஆற்றல்கள் இல்லை என ரெவரெண்டு ஸ்டேண்டன் பொதுமக்கள் மத்தியில் அறிவிப்பாராயின், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது தரப்பிலிருந்து முன்னறிவிப்புகளை வெளியிடத் தயார் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் அப்படிச் செய்யப்படும் முன்னறிவிப்புகள் அசாதாரணமானவையாக இருக்க வேண்டும்; தாம் அவ்வாறு செய்யத் தவறினால் கிறிஸ்தவப் பிரசாரகரின் மதிப்பு மிக்க நேரத்தை வீணாக்கியதற்கு அபராதமாகத் தாம் 300/– ரூபாய் தரத் தயார் என்றும் அறிவித்தார்கள். ஆனால் அதற்குரிய முன்னறிவிப்பு அசாதாரணமானது என ரெவரெண்டு ஸ்டேண்டன் ஒப்புக் கொள்ள வேண்டும். அது நூர் அஃப்ஷான் என்ற பத்திரிகையில் வெளியிடப்பட வேண்டும். அது நிறைவேறினால் தாம்

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வேன் என உறுதி கூற வேண்டும். ஆனால் ரெவரெண்டு ஸ்டேண்டன் இதனை ஏற்றுக் கொள்ள முன் வரவில்லை. அதே நேரத்தில் சிம்லாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். எம். அப்துல்லாஹ் சனோரீ (ரலி) அவர்கள் அவரைச் சந்தித்து இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார். ஆனால் அவர் அந்த முயற்சியில் வெற்றி பெறவில்லை.

1888–ஆம் ஆண்டு ஜூன் 7–ஆம் நாள் வெளியான நூர் அஃப்ஷான் என்னும் பத்திரிகையில் ஃபத்ஹே மஸீஹ் இன்னொரு முறையை முன் வைத்தார். அதன்படி, இதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்தில் ஒரு தாளில் நான்கு கேள்விகள் எழுதப்பட்டு முத்திரையிடப்பட்டு அங்குள்ள ஒரு நபரிடம் கொடுத்து வைக்கப்பட வேண்டும். அந்தத் தாளில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அங்கு கூடியிருக்கிற மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

1888–ஆம் ஆண்டு ஜூன் 9–ஆம் நாள் ரியாஸே ஹிந்து அச்சகத்தில் அச்சிடப்பட்ட ஒரு பிரசுரத்தை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வெளியிட்டார்கள். அதில் தாம் அந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொள்வதாகவும், ஆனால் இந்த விஷயத்தில், தாம் நம்ப முடியாதவர் என ஏற்கனவே நிரூபணம் ஆகியுள்ள ஃபத்ஹே மஸீஹ் அதற்குத் தகுதியானவர் அல்லர் என்பதையும் தெரிவித்திருந்தார்கள். ரெவரெண்டு ஸ்டேண்டன் முன்வருவார் என்றால் அந்தத் தாளில் எழுதப்பட்டுள்ள விஷயங்களைப் பத்து வாரங்களுக்குள் வெளியிடத் தயார் என்றும், அவ்வாறு தெரிவிக்கின்ற விஷயத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் வெற்றி பெற்றுவிட்டால் தாம் முஸ்லிம் ஆகிவிடுவேன் என கிறிஸ்தவப் பாதிரி பொதுமக்கள் மத்தியில் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால், லாஹூரிலுள்ள அஞ்சுமன் ஹிமாயத்தே இஸ்லாம் அமைப்பிற்கு 1000/– ரூபாய் வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் யாரும் இந்த அழைப்பை ஏற்க முன் வரவில்லை.

இஸ்லாத்தின் சார்பாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மேற்கொண்ட தீவிரமான பிரசாரம், விபரம் தெரிந்த முஸ்லிம்கள் மத்தியில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மார்க்கத்திற்காகப் பாடுபடும் ஒரு மாவீரராக மக்களால் அங்கீகரிக்கப்பட்டார்கள். ரியாஸே ஹிந்து என்னும் பத்திரிகை தனது 1.3.1886–ஆம் தேதியிட்ட இதழில் பின்வருமாறு எழுதியது:

“மிர்ஸா சாஹிபின் மிக உயர்ந்த சிறப்புகளும், உயர்வான ஆன்மீகச் சாதனைகளும் நமது பத்திரிகையில் எழுதப்படும் எளிய விஷயங்களை விட உயர்வானவையாகும். இஸ்லாத்தின் சார்பாகவும், உண்மைக்கு ஆதாரமாகவும் அன்னார் எடுத்து வைக்கும் சிறப்பான வாதங்களும் தெளிவான காரணங்களும் நடையிலும், எடுத்து வைக்கும் தன்மையிலும் முக்கால, இக்கால ஆலிம்களின் எழுத்துகளை விஞ்சி விட்டது என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக்குகின்றன. அன்னாரின் நூலான ‘பராஹீனே அஹ்மதிய்யா’ –வைப் படித்தோர் அந்நூல் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருந்தாலும் அந்நூலுக்கு மறுப்பு எழுதுவோருக்கு 10,000 ரூபாய் வெகுமதி அளிக்கப்படும் என்று பிரசுரங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும், இஸ்லாத்திற்கும், நபி (ஸல்) அவர்களுக்கும் எதிரான சக்திகள் எவரும் உண்மையின் களத்திற்கு வந்து பரிசைத் தட்டிச் செல்லவில்லை.”

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எவ்வளவு உயர்வான இடத்தில் வைத்துப் போற்றப்பட்டார்கள் என்பதை ரியாஸே ஹிந்து பத்திரிகையில் 18.6.1888 அன்று வெளி வந்த பின்வரும் செய்தி தெளிவாகக் காட்டுகிறது:

“ஈதுல் ஃபித்ர் பண்டிகையின்போது பட்டாலாவில் தங்கி இருந்த இஸ்லாத்தில் பெருமைக்குரியவரும், காதியானின் தலைவருமான ஜனாப் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிபும் பெருநாள் திடலுக்கு வந்து சிறப்பித்தார்கள். அங்கு ஏறத்தாழ 4000 பேர் கூடியிருந்தனர். ஜனாப் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் கேட்டுக் கொண்டபடி மவ்லவி குத்ரத்துல்லாஹ் சாஹிப் பெருநாள் தொழுகையை முன் நின்று நடத்தினார்கள்.” (ரியாஹே ஹிந்து பத்திரிகை 28.5.1888)



இஸ்லாத்தின் எதிரிகள் இதற்குப் பல காலம் முன்பே அன்னார் ‘மார்க்கத்தின் மாவீரர்’ என்பதை அறிந்து வைத்திருந்தனர். நூர் அஃப்ஷான் பத்திரிகையின் 30.3.1882 ஆம் நாளிட்ட இதழில் கிறிஸ்தவர்கள் இஸ்லாத்தின் தனித்தன்மையை நிரூபிக்கும்படி அன்னாரை நோக்கி சவால் விடுத்தனர்.

## கிறிஸ்தவர்கள் காட்டிய வெறுப்புணர்வு

ஃபத்ஹே மஸீஹின் அவமானகரமான செயல்பாடு கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. மக்கள் மத்தியில் அவர் அடைந்த தோல்வி இழுக்கை உருவாக்கியது. கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு சலசலப்பை உருவாக்கியது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் சார்பில் மேற்கொண்ட தீவிரப் பிரசாரம் கிறிஸ்தவ பிரசாரகர்களின் கவனத்தை அவர்கள் பக்கம் ஈர்த்தது. கிறிஸ்தவ நம்பிக்கையைப் பரவ விடாமல் தடுக்கும் மிகப் பெரும் ஆற்றல்கள் அன்னாரிடம் மறைந்திருந்தன. எனவே கிறிஸ்தவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை இழிவடையச் செய்யும் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஃபத்ஹே மஸீஹ் சமீபத்தில்

அடைந்த தோல்வி அவர்களின் உள்ளத்தில் நிழலாடிக் கொண்டிருந்தது. அதற்கு வஞ்சம் தீர்க்க உறுதி பூண்டனர். அவர்களுக்கு ஏதுவாக ஒரு நிகழ்ச்சி அமைந்தது. அது பின்வருமாறு:

மார்க்கத்தில் கொஞ்சமும் ஈடுபாடு இல்லாத காரணத்தால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைக் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்த அன்னாரின் உறவினர்கள் சிலரைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அவர்கள் முற்றிலும் நேர்மையற்றவர்களாக இருந்தனர். எனவே இஸ்லாத்தின் எதிரிகளோடு கைகோர்த்தனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் கூறிய எதையும் நம்ப மறுத்தனர். அவர்கள் 1885–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஒரு பிரசுரம் வெளியிட்டனர். அதில் அவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம், ஓர் இறை அடையாளத்தைக் காட்டும்படி கேட்டுக் கொண்டனர். இதன் பொருள், அவர்கள் உண்மையை அறிய வேண்டும் என்ற நேர்மையான எண்ணத்தில் கேட்டனர் என்பதாகும். அதன் மூலம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை கேலிக்குரியவர்களாக ஆக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

1888–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மிர்ஸா நிஸாம் தீன் என்பவரின் மகள் தன் இள வயதில் ஒரு பச்சிளம் குழந்தையை விட்டு விட்டு இறந்தார். இது, 'அவர்களைத் துன்பம் சூழ்ந்து கொள்ளும்' என்ற ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க நிகழ்ந்தது. ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் எதிரிகள் மிகவும் கல் நெஞ்சம் கொண்டவர்களாக இருந்ததால் இந்தப் பெருந் துன்பம் அவர்களிடம் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. அவர்கள் தம் தீய வழிகளில் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவர்களின் நிலையைக் கண்டு மிகவும் வருந்தினார்கள். அவர்களுக்காக அடிக்கடி துஆ செய்தார்கள். மிர்ஸா நிஸாம் தீன், இமாம் தீன் ஆகியோரின் சகோதரியான உம்ருன்னிஸா என்பவர் மிர்ஸா அஹ்மது பேக் என்பவரைத் திருமணம் செய்திருந்தார். மிர்ஸா பேக் ஒரு தனிப்பட்ட விஷயமாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை அணுகினார். மிர்ஸா அஹ்மது பேக்கின் சகோதரியான இமாம் பீபீ என்பவர் மிர்ஸா குலாம் ஹுஸைன் என்பவரைத் திருமணம் செய்திருந்தார். அந்த மிர்ஸா குலாம் ஹுஸைன் என்பவர் 25 வருடங்களுக்கு முன் எங்கோ சென்று விட்டார். அவர் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மிர்ஸா குலாம் ஹுஸைன் என்பவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார். அவர் தொலைந்து போய்விட்டதால் வாரிசுரிமைப்படி, அவரது சொத்துகள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு சொந்தமாகி இருக்க வேண்டும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு இதுபோன்ற விஷயங்களில் நாட்டமில்லாத காரணத்தால் அவை அரசாங்க ஆவணங்களில் அவரது மனைவியின் பெயரில் பதிவு செய்யப்பட்டன.

அந்தச் சொத்துக்களைத் தமது மகன் பெயரில் எழுதி வைக்கும்படி மிர்ஸா அஹ்மது பேக் தமது சகோதரியை வற்புறுத்தினார். ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் ஒப்புதல் இன்றி இந்தச் சொத்துப் பங்கீடு நடைபெற முடியாதிருந்தது. எனவே இது தொடர்பாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உதவியை நாட வேண்டிய கட்டாயத்திற்கு மிர்ஸா அஹ்மது பேக் ஆளானார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அதற்கான நன்கொடைப் பத்திரத்தில் கையெழுத்திட ஆயத்தமாகி விட்டார்கள்.

அப்போது பொதுவாக முக்கியமான விஷயங்களைச் செய்வதற்கு முன் இறைவனின் வழிகாட்டலை வேண்டிப் பிரார்த்திக்கும் தமது வழக்கப்படி இந்த விஷயத்திலும் இறைவனின் வழிகாட்டலை வேண்டிப் பிரார்த்திக்க நாடினார்கள். தமது இந்த விருப்பத்தை மிர்ஸா அஹ்மது பேக்குக்கும் தெரியப்படுத்தினார்கள். அவரும் காத்திருக்க ஒப்புக்கொண்டார். மிர்ஸா அஹ்மது பேக்கின் வேண்டுகோள் தொடர்பாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்திகாரா தொழுகையில் ஈடுபட்டார்கள். இதன் விளைவாக அன்னார் (அலை) ஓர் இறையறிவிப்பைப் பெற்றார்கள். அதன்படி, மிர்ஸா அஹ்மது பேக்கின் மகளான முஹம்மதீ பேகம் என்பவரை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கும்படிக் கேட்க வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாக இருந்தது. அந்தத் திருமணத்திற்கு அவர் ஒப்புக் கொண்டால், அது அவர்கள் அனைவருக்கும் மிகப் பெரும் அருளாக அமையும். அவர் மறுப்பாரேயானால் அது முஹம்மதீ பேகத்திற்குத் தீங்காக அமையும். அவரைத் திருமணம் செய்து கொள்பவர் திருமணத்திற்குப் பின் இரண்டரை ஆண்டுகளில்

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்...)



இஸ்லாத்தின் சார்பாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மேற்கொண்ட தீவிரமான பிரசாரம், விபரம் தெரிந்த முஸ்லிம்கள் மத்தியில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மார்க்கத்திற்காகப் பாடுபடும் ஒரு மாவீரராக மக்களால் அங்கீகரிக்கப் -பட்டார்கள். 'ரியாஸே ஹிந்து' என்னும் பத்திரிகை தனது 1.3.1886–ஆம் தேதியிட்ட இதழில் பின்வருமாறு எழுதியது:

மிர்ஸா சாஹிபின் மிக உயர்ந்த சிறப்புகளும், உயர்வான ஆன்மீகச் சாதனைகளும் நமது பத்திரிகையில் எழுதப்படும் எளிய விஷயங்களை விட உயர்வானவை ஆகும். இஸ்லாத்தின் சார்பாகவும், உண்மைக்கு ஆதாரமாகவும் அன்னார் எடுத்து வைக்கும் சிறப்பான வாதங்களும் தெளிவான காரணங்களும் நடையிலும், எடுத்து வைக்கும் தன்மையில் முக்கால, இக்கால ஆலிம்களின் எழுத்துகளை விஞ்சி விட்டது என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக்குகின்றன......

# அஹ்மதிய்யத் உண்மை இஸ்லாம்

**மவ்லவி S. அப்துல் காதிர்**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த காலத்தில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் கிறிஸ்தவ மதத்தின் போலி முகத்தை உலகிற்கு அடையாளம் காட்டி உண்மை இஸ்லாத்தை மேலோங்கச் செய்தார்கள்.

ஆட்சி முறை குறித்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் நிலைபாடு:

"ஆங்கிலேயர்கள் ஒரு வகையில் இந்தியாவில் இஸ்லாமிய மன்னர்களால் கூட செய்ய முடியாத அளவிற்கு நமது மார்க்கத்திற்கு உதவி செய்துள்ளனர். இதனை நாம் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளாவிட்டால் நாம் நம்பிக்கை துரோகம் செய்தவர்களாகி விடுவோம். ஏனெனில், இந்தியாவின் இஸ்லாமிய ஆட்சியாளர்கள் தமது கோழைத்தனத்தின் காரணமாக பஞ்சாப் மாநிலத்தை கை நழுவ விட்டனர். இவர்களின் இந்த அறியாமையினால் சீக்கியர்களில் பல்வேறு பிரிவினர்களின் ஆட்சிக் காலத்தில் நம் மீதும் நமது மார்க்கத்தின் மீதும் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன. பள்ளிவாசல்களில் ஜமாஅத்தாக தொழுவது மற்றும் உரத்த குரலில் பாங்கு சொல்வதுகூட முடியாமல் இருந்தது. பஞ்சாபில் இஸ்லாமிய மார்க்கம் அழிந்தே போனது. பின்பு தான் ஆங்கிலேயர்கள் வந்தனர். அவர்கள் ஆங்கிலேயர்கள் அல்ல நமது அதிஷ்டங்களை மீட்டுக் கொடுத்தவர்கள். அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்திற்கு ஆதரவளித்தார்கள். மேலும் நமது மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற நமக்கு முழு சுதந்திரம் வழங்கினார்கள். இதனால் நமது பள்ளிவாசல்களின் கதவுகள் திறக்கப்பட்டன. வெகு காலத்திற்குப் பிறகு மீண்டும் பஞ்சாபில் இஸ்லாமிய நடைமுறைகள் தென்பட ஆரம்பித்தன. இது நினைவில் வைக்கப்பட வேண்டிய கருணை இல்லையா? இன்னும் சொல்வதென்றால் கோழைத்தனம் வாய்ந்த சில இஸ்லாமிய மன்னர்கள் தமது கவனமின்மையினால் நம்மை கபருஸ்தானில் தள்ளிவிட்டுச் சென்றனர். ஆங்கிலேயர்கள் நமது கரம் பிடித்து அதிலிருந்து மீட்டு வெளியில் கொண்டு வந்தனர். ஆகவே, ஆங்கிலேயர்களுக்கு எதிராக கிளர்ச்சியைத் தூண்டுவது இறை அருளைப் புறக்கணிப்பதாகும்." (சஷ்மயே மஸீஹி இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு www.alislam.org/library/books/Foundation of Christianity)

ஆங்கிலேய ஆட்சிக்கு முஸ்லிம்கள் கீழ்படிந்து நடக்க வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்த அதே நேரம் ஷிர்க்கான மதக் கொள்கைகளை விட்டு விட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள முன்வருமாறு, இஸ்லாமிய ஏகத்துவ கொள்கையின் பால் அழைப்பு விடுக்கவும் அவர்கள் தயங்கவில்லை. இதற்காக ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் விக்டோரியா மகாராணிக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை மிக அழகிய முறையில் எடுத்துரைத்து அதன்பால் அழைப்பு விடுத்து கடிதம் எழுதினார்கள். (Message of Queen Victoria https://alislam/e5302)

இந்நிலையில் இவர் ஆங்கிலேயர்களின் கைக்கூலி என்று குற்றம் சாட்டுவது எவ்வாறு பொருத்தமாகும்?

ஆங்கில அரசாங்கத்தின் ஆட்சிமுறை குறித்த தம் கருத்துக்களையும் நிலைபாட்டையும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக தெரிவிக்க ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு ஐந்து காரணங்களினால் நிர்பந்தம் ஏற்பட்டது என்று கூறலாம். இன்னும் சொல்வதென்றால் ஜிஹாது குறித்து முஸ்லிம்களிடம் காணப்பட்ட தவறான புரிதல் மற்றும் அது சார்ந்த நம்பிக்கைதான் இதற்கு அடிப்படைக் காரணம் எனலாம்.




1) இலண்டனிலிருந்து வெளிவந்த The 20th Centuray என்ற ஆங்கிலப் பத்திரிகையின் டிசம்பர் 1877–ஆம் ஆண்டு வெளியான இதழின் 832–ஆம் பக்கத்தில் பாதிரி மேலிக்கம் மிக்கால் என்பவர் இவ்வாறு எழுதுகிறார்:

"திருக்குர்ஆன் உலகை இரண்டு பாகங்களாகப் பிரிக்கின்றது. ஒன்று, தாருல் இஸ்லாம் அதாவது இஸ்லாமிய நாடு. மற்றொன்று தாருல் ஹர்ப் (போர்க்களம்) அதாவது எதிரியின் நாடு. முஸ்லிமாக மதம் மாறாதவர்கள் அனைவரும் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள். இதன் அடிப்படையில் உண்மையான முஸ்லிமின் கடமை என்னவென்றால், நிராகரிப்பவர்களுக்கு எதிராக போர் செய்ய வேண்டும். இதனால் ஒன்று அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது



கொலை செய்யப்பட வேண்டும். இதையே, 'ஜிஹாது' அல்லது 'புனிதப்போர்' என்று கூறுகிறார்கள். உலகில் உள்ள அனைத்து நிராகரிப்பாளர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலையில்தான் இதனை முடிவுக்கு கொண்டு வர முடியும். இத்றகாக இஸ்லாத்தின் கலீஃபாவின் புனிதமான கடமை என்னவென்றால், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் முஸ்லிம் அல்லாத நாட்டின் மீது ஜிஹாது செய்ய வேண்டும்.''

மேற்கத்திய கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது முஸ்லிம்களும் ஜிஹாதின் உண்மைத்துவத்தைப் புரியாத காரணத்தினால் இஸ்லாத்தின் முகத்தை மிகவும் அபாயகரமான தோற்றமாக உலகின் முன் காட்டியுள்ளனர். ஆதலால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பல நூல்களில் ஜிஹாது தொடர்பான உண்மையான இஸ்லாமிய கோட்போட்டை எடுத்துரைத்து இஸ்லாத்தின் மீது அந்நியர்களுக்கு ஏற்பட்டிருந்த தவறான அபிப்பிராயங்களைக் களைவதற்காகவும், முஸ்லிம்களை சீர்திருத்துவதற்காகவும் ஆங்கிலேயே அரசு தொடர்பான தமது நிலைபாட்டை மீண்டும் மீண்டும் எழுத வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்கள். இது அல்லாமல் வேறு சில காரணங்களுக்காகவும் இந்தக் கருத்தை மீண்டும் மீண்டும் எழுத வேண்டிய அவசியம் இருந்தது.

2) இமாம் மஹ்தி வெளிப்படுவார். அவர் வாள் முனையில் இஸ்லாத்தைப் பரப்புவார். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை உயிருடன் விட்டு விடுவார். அதை மறுப்பவரை கொன்று விடுவார் என்பது இமாம் மஹ்தி குறித்த முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். இன்றும் முஸ்லிம்கள் ஏறத்தாழ இப்படித்தான் நம்பிக் கொண்டிருக்கின்றனர்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தம்மை இமாம் மஹ்தி என்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி என்றும் வாதிட்டார்கள். முஸ்லிம்களுடைய சிந்தனையோ வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றி நிராகரிப்பவர்களுடன் போர் புரிவார். இறுதி நாளில் வாளைக் கொண்டு இஸ்லாத்தைப் பரப்புவார் என்பதாக இருக்கின்றது; இந்நிலையில் ஆங்கிலேயே அரசாங்கம் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை சந்தேகப் பார்வையுடன் பார்த்தது. எனவே, அவர்கள் இந்த அரசு நீதியுடன் ஆட்சி நடத்துவதைப் பாராட்டி எழுதுவதன் மூலம் தம்முடைய நல்லெண்ணத்தின் அடிப்படையிலான உண்மைகளை வெளிப்படுத்துவது அவசியமாக இருந்தது. அதையே அவர்கள் செய்தார்கள்.


3) ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தம்மை இமாம் மஹ்தி என்று வாதிப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன் சூடானிலிருந்து ஒருவர் (1871–1882) அக்காலக்கட்டத்தில் தன்னை மஹ்தி என்று வாதித்தது மட்டுமின்றி சூடான் நாட்டின் ஆங்கிலேயே அரசுக்கு எதிராக போர் பிரகடனம் செய்து கிளர்ச்சியில் ஈடுபட்டார். இறுதியில் 1882–ஆம் ஆண்டு அவர் ஆங்கியேலர்களால் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயர்கள் அந்த சம்பவத்தை இன்னும் மறந்திருக்கவில்லை. அதனால்தான் யார் மஹ்தி என்று வாதம் செய்தாலும் அவரை பிரிட்டீஷ் அரசு நல்ல கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை என்பது மட்டுமல்லாது அந்த நபரை ஏற்றுக் கொள்வதுமில்லை.

4) சில ஆலிம்கள் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் மீது தவறான, உண்மைக்கு மாற்றமான கருத்துக்களை இட்டுக்கட்டி ஆங்கிலேய அரசுக்கு சூடானிய மஹ்தியின் காலத்தை உதாரணம் காட்டி, நினைவுபடுத்தி மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிரான நிலைபாட்டை எடுக்க அரசைத் தூண்டி வந்தனர். இரவு பகலாக இந்த மவ்லவிகளின் பணி இதுவாகவே இருந்து வந்தது. இந்த வகையில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி என்பவரது முயற்சி குறிப்பிடத்தக்கது.

இவர் இஷாஅத்துஸ் ஸுன்னா என்ற தனது பத்திரிகையில் இவ்வாறு எழுதினார்: ''அரசாங்கம் இவரை (அதாவது மிர்ஸா குலாமை) நம்புவது அரசுக்கு உகந்ததல்ல. இவரைப் பற்றிய அச்சம் அரசுக்கு இருந்து வர வேண்டும். இல்லை என்றால் சூடானி மஹ்தியின் மூலம் ஏற்பட்ட இழப்புகளை விட அதிகமாக இந்த காதியானி மஹ்தியின் மூலம் ஏற்படும்.'' (ஆதாரம்: இஷாஅத்துஸ் ஸுன்னா இதழ் 16 எண் 6 அடிக்குறிப்பு பக்கம் 167. 1893–ஆம் ஆண்டு வெளியீடு)

5) கிறிஸ்தவ பாதிரிகள் இஸ்லாத்திற்கு எதிரான விவாதங்கள் மற்றும் அனைத்து களங்களிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் தோல்வியை சந்தித்து அச்சத்தால் நடுங்கிக் கொண்டிருந்த காலம் அது. ஆதாரங்கள் மற்றும் அத்தாட்சிகளால் இஸ்லாத்தை எதிர் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து தம் தோல்வியை மறைக்க மதக் கொள்கையில் தம்முடன் ஒன்றுபட்டிருந்த ஆங்கிலேய அரசாங்கத்தின் உதவியை நாடினர். இதன் மூலம் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களைக் கைது செய்தோ அல்லது கட்டுப்பாடுகளை விதித்தோ இஸ்லாத்தை பிரச்சாரம் செய்வதை விட்டு தடுத்து வைப்பதன் மூலம் தமது பழிதீர்க்கும் வழியை எளிதாக்கிக் கொள்ளலாம் என்று முயற்சித்தனர்.

இதற்காக கிறிஸ்தவ பாதிரிமார்களால் ஜோடிக்கப்பட்ட பொய்யான கொலை வழக்கு ஒன்றில் Father Henry Martin Clark என்பவரை ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிராக பொய்சாட்சி சொல்வதற்காக ஏற்பாடு செய்தனர். அவரும் பொய்சாட்சி கூறினார். பாதிரி ஹென்றி மார்ட்டின் கிளார்க் ஆங்கிலேயே அரசு அதிகாரிகளிடம் மிகுந்த செல்வாக்கு படைத்தவர் மட்டுமின்றி மிக நெருங்கிப் பழகக் கூடியவரும் ஆவார். ஆதலால், ஆங்கிலேயே அரசு அதிகாரிகளிடம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிராகப் பேசி வந்தார். அதே போன்று பாதிரி இமாதுத்தீன் போன்றவர்களும் தங்களுடைய எழுத்துகளில் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிராக இதுபோன்ற அவதூறுகளை எழுதி வந்தனர். இதன் காரணமாகவும் ஆங்கிலேயே அரசுக்கு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் மீது தப்பெண்ணம் ஏற்படு –வதற்கான வாய்ப்புகள் இருந்தன. எனவே அவற்றைப் போக்குவதற்காக தம்முடைய கருத்தை வெளிப்படையாக எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



6) 1857–ஆம் ஆண்டு ஆங்கிலேயே அரசுக்கு எதிராக ஒரு கிளர்ச்சி நடந்து முடிந்து சிறிது காலமே கழிந்திருந்த நிலையில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இறைவனின் கட்டளையால் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மற்றும் மஸீஹ் என வாதம் புரிந்தார்கள். அந்தக் கிளர்ச்சியில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலந்து கொண்டனர். பின்னர் முஸ்லிம்கள், தாம் இழந்த ஆட்சியை மீண்டும் நிறுவுவதற்காகவே இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தினர் என்று கூறி ஹிந்துக்கள் இந்த கிளர்ச்சியிலிருந்து பின்வாங்கினர். அந்தக் காலத்தில் தான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் இறைவனின் கட்டளைக்கு ஏற்ப இமாம் மஹ்தி என்று வாதித்திருந்தார்கள். ஆங்கிலேயர்களின் பார்வையில் இதுவும் ஒரு கிளர்ச்சியாகவே கருதப்பட்டது.

இவ்வாறு அரசு கருதுவதற்கு ஒரு முகாந்திரமும் இருந்தது. அதாவது, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் முகலாய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இந்த முகலாய சாம்ராஜ்யத்திற்கு ஆங்கிலேயர்கள் தங்கள் கைகளால் 1857–ஆம் ஆண்டு முற்றுப்புள்ளி வைத்திருந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் தன்னை மஹ்தி என்று வாதம் செய்தது, மறைந்த போன தம் குடும்பத்தின் மகத்துவத்தையும், தான் இழந்த ஆட்சி, அதிகாரத்தை மீட்டெடுக்கவும் இவர் முயற்சிக்கிறார் என்று கருதியதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

குறிப்பாக முஸ்லிம்களில் மிகவும் செல்வாக்கு படைத்திருந்த ஆலிம்களும் கிறிஸ்தவர்களில் செல்வாக்கு படைத்திருந்த பாதிரிமார்களும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு எதிராக அல்லும் பகலும் அரசைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தனர். மேலும் இரகசியமாகவும் ஆங்கிலேயே அரசிடம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் தொடர்பான தப்பெண்ணங்களை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தனர். இந்த சூழ்நிலையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் ஜிஹாது தொடர்பாக முஸ்லிம்களின் தவறான கொள்கைகளையும் கருத்துக்களையும் களைந்து அவர்களை சீர்திருத்தும் நோக்குடன் ஜிஹாதின் உண்மைத்துவத்தைத் தெளிவாக விளக்கிக் கூறுவதற்காகவே அவர்கள் தங்கள் நிலைபாட்டை எடுத்துரைத்து புரிய வைத்து வந்தார்கள்.

ஆங்கிலேயர்களுடன் வாளேந்தி போர் செய்கின்ற ஜிஹாதை ஆகுமான –தல்ல என்ற நிலைபாட்டை எடுத்து அதில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் நிலைத்திருந்தார்கள் என்றால் அதற்கான காரணம், ஓர் அரசு அமைதியுடனும் நீதியுடனும் ஆட்சி புரிந்து வரும் நிலையில் அது முழுமையான மத சுதந்திரத்தை நடைமுறைப்படுத்தி வருகிறதென்றால் மேலும், முஸ்லிம்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளித்து வருகிறதென்றால், இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படையில் அந்த அரசுடன் வாளேந்தி போர் செய்கின்ற ஜிஹாது ஆகுமானதல்ல என்பதுதான். திருக்குர்ஆனின் இந்தப் போதனையே அவர்களின் கொள்கையாக இருந்தது.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆங்கிலேய அரசாங்கத்தைப் புகழ்கின்றார் என்ற குற்றச்சாட்டை அப்போதே எழுப்பிய மக்களை நோக்கி அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

‘‘அறிவீனர்களே! நான் இந்த அரசாங்கத்தைப் புகழவில்லை. மாறாக, உண்மை யாதெனில், இஸ்லாமிய மார்க்கத்திலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் இந்த அரசாங்கம் சிறிதளவும் தலையிடுவதில்லை. மேலும், அது தன்னுடைய மார்க்கத்தை (கிறிஸ்தவ மதத்தை) வளர்ப்பதற்காக நமக்கெதிராக எவ்வித ஆயுதங்களையும் பயன்படுத்தவில்லை. (மார்க்க சுதந்திரம் அளிக்கும்) இப்படிப்பட்ட அரசாங்கத்தை எதிர்த்து மார்க்கப் போர் புரிவது திருக்குர்ஆனின் அடிப்படையில் ஹராமாகும். ஏனெனில், இந்த அரசு எந்தவொரு மார்க்கப்

போரும் செய்யவில்லை.'' (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயீன் தொகுதி 19 பக்கம் 75 அடிக்குறிப்பு பக்கம் 69. இந்நூலின் தமிழாக்கம் நூஹ் நபியின் கப்பல் என்ற பெயரில் வெளிவந்துள்ளது.)

ஆங்கிலேயர்களுடன் மார்க்கப் போர் என்ற பெயரில் ஜிஹாது செய்வது இஸ்லாமிய கொள்கையின் படி ஹராம் என்ற நிலைபாட்டை எடுத்ததில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் மட்டும் தனித்து நிற்கவில்லை. மாறாக பல மார்க்க அறிஞர்கள் மற்றும் முஸ்லிம்களால் பெருமளவு இன்றும் மதிக்கப்படுகின்ற ஹஸ்ரத் செய்யது அஹ்மது பரேல்வி (ரஹ்) அவர்களும் இதே கொள்கையுடையவர்களாக தான் இருந்தார்கள்.

இன்னும் சொல்வதென்றால், மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் எதிரி மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி 1876–ல் 'அல்இக்திஸாது ஃபீ மஸாயிலுல் ஜிஹாது' என்ற தலைப்பில் ஒரு பிரசுரம் எழுதி அது தொடர்பாக இஸ்லாமிய ஆலிம்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக லாஹூரிலிருந்து அஹ்மதாபாத் மற்றும் பாட்னா வரை பயணம் மேற்கொண்டு பல்வேறு இஸ்லாமிய அமைப்புகளைச் சேர்ந்த மிகப் பெரிய ஆலிம்களுக்கு இந்தப் பிரசுரத்தை ஒவ்வொரு எழுத்தாக வாசித்துக் காட்டி அவர்களின் ஒருமித்தக் கருத்தைப் பெற்றார். அந்தப் பிரசுரத்தில் அவர் முன்வைத்த ஆதாரங்களைச் சுட்டிக் காட்டி கூறுகிறார்.

இந்த ஆதாரங்களிலிருந்து மிகத் தெளிவாக புலனாவது என்னவென்றால், இந்தியா கிறிஸ்தவ அரசாங்க ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோதிலும் இஸ்லாமிய (ஆதரவு) அரசாகவே இருக்கிறது. எனவே, இந்நாட்டின் மீது எந்த பிற அரசும் அது அரபியாக இருந்தாலும், அஜமியாக (அரபியல்லாத பிற) அரசாக இருந்தாலும், சூடானி மஹ்தியாக இருந்தாலும், சுல்தான் ஷாஹ் ஈரானியாக இருந்தாலும், பாரசீகத்தின் தலைவராக இருந்தாலும் மார்க்கத்தைக் காரணங்காட்டி படையெடுப்பு நடத்துவதோ அல்லது போரிடுவதோ ஆகுமானதல்ல. (ஆதாரம்: அல் இக்திஸாது ஃபீ மஸாயிலுல் ஜிஹாது பக்கம் 16)

இஷாஅத்துஸ் ஸுன்னா எனும் தன் பத்திரிகையில் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி எழுதுகிறார்:

''இஸ்லாமியர்கள் இந்தியாவில் ஆங்கில அரசுக்கு எதிராக செயல்படுவதும், கிளர்ச்சி செய்வதும் ஹராமாகும்.'' (இஷாஅத்துஸ் ஸுன்னா தொகுதி 6 எண் 10 பக்கம் 187)

அவர் மேலும் எழுதுகிறார்: ''இந்த அமைதி, சுதந்திரம் மற்றும் ஆங்கிலேய அரசாங்கத்தின் நேர்மையான ஆளுமை ஆகியவற்றைப் பார்த்து இந்தியாவில் உள்ள அஹ்லே ஹதீஸ் பிரிவினர் இந்த ஆட்சியை சிறந்ததாகக் கருதுவார்கள். மேலும், இஸ்லாமிய ஆட்சியின் குடிமகனாக இருப்பதை விட ஆங்கிலேயே ஆட்சியின் குடிமகனாக இருப்பதையே சிறந்ததாகக் கருதுகிறார்கள். மேலும், அவர்கள் எங்கு சென்றாலும், எங்கு வாழ்ந்தாலும் வேறு எந்த நாட்டின் குடிமகனாகவும் இருக்க விரும்பவில்லை.'' (இஷாஅத்துஸ் ஸுன்னா தொகுதி 6 எண் 10 பக்கம் 293)

பேர்பாலைச் சேர்ந்த நவாப் மவ்லவி முஹம்மது சித்தீக் ஹஸன் கான், மவ்லவி நாஸீர் ஹுஸைன் முஹத்தஸ் தஹ்லவி, மவ்லவி ரஷீது அஹ்மது கங்கோஹி, மவ்லவி அஷ்ரஃப் அலி தானவி, மவ்லவி அப்துல் அஸீஸ் சாஹிப் மற்றும் மவ்லவி முஹம்மது முஃப்தி லூதியானவி போன்ற இஸ்லாமிய பிரசித்தி பெற்ற ஆலிம்கள் அனைவரின் கொள்கையும் ஃபத்வாவும் ஆங்கிலேய அரசை எதிர்ப்பது முஸ்லிம்களின் ஷரீஅத்தின்படி ஹராம் ஆகும் என்பதாகவே இருந்தது. (மவ்லவி முஹம்மது முஃப்தி லூதியானவி அவர்கள் ஹிஜ்ரி 1306–ஆம் ஆண்டு எழுதிய நுஸ்ரத்துல் அப்ரார் என்ற நூலைக் காண்க.)

ஆகவே, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஆங்கிலேய அரசை ஆதரித்ததற்கும் அதற்கு விசுவாசத்துடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கும் இந்த மூன்று காரணங்கள் தான் இருக்க முடியும்.

1. இந்த அரசு பஞ்சாபில் முஸ்லிம்களின் மீது சீக்கிய அரசாங்கம் இழைத்து வந்த கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்றுத் தந்தது.

2. இந்த அரசு நாட்டில் அமைதியுடனும் நீதியுடனும் ஆட்சி நடத்தி வந்தது.

3. இந்த அரசு நாட்டில் மத சுதந்திரத்தை முழுமையாக அமல்படுத்தி வந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலகட்டத்தில் இந்தியாவில் வாளேந்தி போர் செய்வதற்கான நிபந்தனைகள் ஏதும் தென்படாத காரணத்தால், அவர்கள் இவ்வாறு தீர்ப்பு வழங்கினார்கள். மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து பிரசித்தி பெற்ற உலமாக்களும் தங்களுடைய எழுத்தாலும், சொல்லாலும், செயலாலும் மிர்ஸா குலாம் அஹ்மது



(அலை) அவர்களின் இந்தக் கொள்கையை ஆமோதித்தார்கள் என்பதற்கு இன்னும் ஏராளமான சான்றுகள் உள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நண்பர்களே! இப்போது ஜிஹாதிற்கான எண்ணத்தை விட்டு விடுங்கள். இப்போது மார்க்கத்தின் பெயரால் ஜிஹாது மற்றும் சண்டையிட செல்பவர் காஃபிர்களிடம் மிகவும் மோசமான முறையில் அவமானம் அடைவார். (ஆதாரம்: தொஹ்ஃபா கோல்டவிய்யா. ரூஹானி கஸாயீன் தொகுதி 17 பக்கம் 77)

உலகில் எங்கெல்லாம் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பெயரால் ஆயுதமோந்தி ஜிஹாது செய்து வருகிறார்களோ அங்கெல்லாம் மிகவும் மோசமான தோல்வியே அடைந்துள்ளனர் என்பதற்கு சமீபத்திய போர்களே சாட்சியாகும். இன்றைய காலத்தில் இஸ்லாத்தின் தப்லீக் மற்றும் மனிதகுலத்தின் சீர்திருத்தத்திற்காக திருக்குர்ஆனின் உதவியால் பேனாவைக் கொண்டு ஜிஹாது செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இந்த வகை ஜிஹாதை கையில் எடுத்துள்ளது. கிலாஃபத் எனும் இறை அருளால் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் தலைமையில் உண்மை இஸ்லாத்தை உலகெங்கிலும் தலை நிமிர வைத்துக் கொண்டிருக்கிறது – அல்ஹம்துலில்லாஹ்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பல்வேறு துறைகளில் குறிப்பாக முஸ்லிம்கள் இன்று சந்தித்து வருகின்ற சமூக, பொருளாதார, அரசியல், ஆன்மீகம் போன்ற அத்துணை பிரச்சனைகளுக்கும் இஸ்லாமிய தீர்வு, வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான பல உரைகளை நிகழ்த்தி வருகிறார்கள். அவர்களின் ஆலோசனைகள் உண்மை இஸ்லாமிய கோட்பாடுகளை உலகெங்கும் அமல்படுத்துவதற்கு இன்றியமையாதவையாகும். அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன:

இறைவனை வணங்குவதும் அவனுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகளை முறைப்படி செலுத்துவதுமே மனித வாழ்வின் நோக்கமாகும்.

நல்லொழுக்கம் மற்றும் இறையச்சத்தைப் பேணியவாறு சக படைப்பினங்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை எந்தப் பிரதிபலனும் பாராமல் அல்லாஹ்வுக்காக செய்ய வேண்டும்.

திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளின் ஒளியில் அறிவைப் பெற்று, மார்க்கக் கல்வியை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

உலகத்தை விட மார்க்கத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

நேர்மையுடன் பொறுப்பான குடிமக்களாக இருந்து, தான் சார்ந்திருக்கும் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் மத, மன, நிற, மொழி பாகுபாடுகள் ஏதுமின்றி தன்னலம் பாராமல் சேவையாற்ற வேண்டும். நாட்டின் சட்டதிட்டங்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

நல்ல குணம் மற்றும் தார்மீக நடத்தைக்கு சிறந்த உதாரணமாக இருத்தல், அமைதி, நல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு: www.alislam.org/tamil என்ற இணைய தளத்தை பயன்படுத்தவும்.

# உயிரா? ஆன்மாவா?

திருக்குர்ஆனின் 39:43 வசனத்தில், 'அல்லாஹ் உயிர்களை அவற்றின் மரணத்தின் போதும், மரணம் அடையாதவற்றை அவற்றின் தூக்கத்தின் போதும் கைப்பற்றுகிறான்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதில் உயிர்களை மரணத்தின்போது கைப்பற்றுகிறான் என்பதில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால் மரணமடையாதவற்றை அவற்றின் தூக்கத்தின்போது கைப்பற்றுகிறான் என்று வருமிடத்தில் தூக்கத்தின்போது உயிரைக் கைப்பற்றுகிறான் என்றால் தூக்கத்தில் எல்லாருக்கும் உயிர் இருக்கத்தானே செய்கிறது? எனவே தூக்கத்தில் கைப்பற்றப்படுவது உயிர் இல்லை என்று தெளிவாகிறது. அது 'ஆன்மா' என்று பொருள் கொண்டால், அல்லாஹ் ஆன்மாக்களை மரணத்தின் போதும், மரணம் அடையாதவற்றை அவற்றின் தூக்கத்தின் போதும் கைப்பற்றுகிறான் என்று பொருள் கொள்ள வேண்டும்.



உயிர் வேறு, ஆன்மா வேறு என்பதற்கு, திருக்குர்ஆனில் 23:15–வது வசனத்தில், "இதன் பிறகு அந்த விந்தை ஒட்டுகின்ற ஒரு பொருளாக உருவாக்கினோம். அடுத்து அந்த ஒட்டுகின்ற பொருளைச் சதைக்கட்டியாக உருவாக்கினோம். பின்னர். அந்தச் சதைக்கட்டியை எலும்புகளாக உருவாக்கினோம். பிறகு அந்த எலும்புகளுக்குச் சதையை அணிவித்தோம். பின்னர் அதனை மற்றொரு படைப்பாக வளர்ச்சி அடையச் செய்தோம்" என்று வருகிறது. கருவில் விந்திலிருந்து படிப்படியாக வளர்ச்சி அடைந்து வரும் நிலைகள் கூறப்பட்டுள்ளன. இதில் உயிர் இருப்பதனால்தான் இந்தக் கரு வளர்ச்சி அடைகிறது என்பதில் யாருக்கும் ஐயம் இல்லை. ஆனால், அதனை மற்றொரு படைப்பாக வளர்ச்சி அடையச் செய்தோம் என்பதில் மற்றொரு படைப்பு என்பது உயிர் அல்லாத ஆன்மா ஆகும்.

உயிரினத்துள் மனிதனுக்கு மட்டும்தான் உயிரும் ஆன்மாவும் இருக்கிறது. பிற உயிரினங்களுக்கு உயிர் மட்டும்தான் உள்ளது. ஆன்மா இல்லை என்று இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. புகாரி ஹதீஸ் எண் 7454–இல், கரு வளர்ச்சி பற்றிக் கூறி வருமிடத்தில், 'பிறகு அவனுள் ரூஹ் ஊதப்படுகிறது' என்று கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனில் 23:15–வது வசனத்தில் வரும் மற்றொரு படைப்பு என்பது அக்கருவில் ஊதப்படும் ரூஹ் – ஆன்மா ஆகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஃராஜின்போது விண்ணுலகப் பயணத்தில் அவர்கள் சென்றது ஓர் ஆன்மீகப் பயணமே ஆகும். உடலுடன் கூடிய பயணம் இல்லை என்பதை புகாரி ஹதீஸ் எண் 7517–இல், மிஃராஜிலிருந்து அவர்கள் திரும்பி வரும்போது, மக்கத்து ஹரம் ஷரீஃபை அடைந்தவுடன், ஜிப்ரீல் (அலை) அவர்கள், முஹம்மதே! அல்லாஹ்வின் பெயர் கூறி இறங்குவீராக என்று கூற, தூக்கத்திலிருந்து முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எழுந்தார்கள் என்று வருகிறது. நபி (ஸல்) அவர்களின் தூக்கத்தின்போது, அவர்களது ஆன்மா கைப்பற்றப்பட்டு, ஜிப்ரீல் (அலை) அவர்களுடன் பயணத்தைத் தொடங்கி, பயணம் முடிந்தவுடன் உடலைச் சென்றடைகிறது.

மிஃராஜ் பயணம் பற்றித் திருக்குர்ஆனில், 'அந்த உள்ளம் தான் கண்டதைக் குறித்துப் பொய் உரைக்கவில்லை' (53:12) என்று கூறப்பட்டுள்ளது. அவர்களது புறக்கண்கள் இறைவனைக் காணவில்லை என்றும் அவர்களது அகக்கண்களே கண்டன என்றும் இதிலிருந்து விளங்குகிறது. இதே போல், நபி (ஸல்) அவர்களின் 'இஸ்ரா' பயணத்திலும் அன்னார் மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸ் வரை சென்றதும் ஓர் ஆன்மீகப் பயணமே ஆகும். எனவேதான் திருக்குர்ஆனில், 'தன் அடியாரைச் சிறப்புக்குரிய (இந்த) மஸ்ஜிதிலிருந்து தொலைவிலுள்ள (அந்த) மஸ்ஜிது வரை இரவு நேரத்தில் கொண்டு சென்ற (இறை)வன் தூயவன்' (17:2) என்று கூறப்பட்டுள்ளது. இது ஓர் ஆன்மாவின் பயணம் என்பதைக் குறித்து 17:61–வது வசனத்தில், 'நாம் உமக்குக் காட்டிய ஆன்மீகக் காட்சியையும், குர்ஆனில் சபிக்கப்பட்ட மரத்தையும் மக்களுக்குச் சோதனையாகவே நாம் ஆக்கியுள்ளோம்' என்று கூறுகிறான். இஸ்ரா பயணம் ஓர் ஆன்மீகக் காட்சி என்று 17:61–வது வசனம் கூறுகிறது.

**A.P.Y. அப்துல் காதிர்**

# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 3. இஸ்லாமிய வரலாறு

1. ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் எப்போது எங்கு பிறந்தார்கள்?

   அரேபிய நாட்டில் கி.பி. 571-ஆம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி பிறந்தார்கள்.

2. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த குலத்தைச் சேர்ந்தவர்கள்?

   அவர்கள் குரைஷி குலத்தைச் சேர்ந்தவர்கள்.

3. ஹஸ்ரத நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தையார் பெயர் என்ன?

   அவர்களது தந்தையரின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் ஆகும்.

4. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாயார் பெயர் என்ன?

   அவர்களின் தாயார் பெயர் ஹஸ்ரத் ஆமினா ஆகும்.

5. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தந்தையார் எப்போது காலமானார்கள்?

   முஹம்மது (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு சில மாதங்களுக்கு முன் காலமானார்கள்.

6. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாயார் எப்போது காலமானார்கள்?

   முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஆறு வயதாக இருக்கும் போது காலமானார்கள்.

7. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தாயார் இறந்த பின்பு அவர்களைக் கவனித்து வந்தது யார்?


   ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களைக் கவனித்து வந்தார்கள்.

8. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் எப்போது காலமானார்கள்?

   ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எட்டு வயதாக இருக்கும்போது அவர்கள் காலமானார்கள்.

9. ஹஸ்ரத் அப்துல் முத்தலிப் அவர்கள் இறந்த பின்பு அவர்களை யார் கவனித்து வந்தார்கள்?

   ஹஸ்ரத் அப்துல் முத்தலிப் அவாகள் இறந்த பின்பு முஹம்மது (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் அபூதாலிப் அவர்கள் கவனித்து வந்தார்கள்.



ஹிரா குகை

10. இறை தியானம் செய்வதற்காக முஹம்மது (ஸல்) அவர்கள் தங்கி வந்த குகையின் பெயர் என்ன?

    மக்காவிற்கு அருகிலிருந்த ஹிரா என்னும் குகைக்குச் சென்று அதில் இறை வணக்கத்திலும் தியானத்திலும் ஈடுபட்டும் வந்தார்கள்.

11. ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களின் முதல் மனைவியின் பெயர் என்ன?

    ஹஸ்ரத் கதீஜா என்பதாகும்.

12. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களை மணந்தபோது ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களின் வயதுஎன்ன?

    ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுக்கு 40 வயதும் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு 25 வயதும் ஆகும்.

13. ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவிமார்களின் பெயர்களைக் கூறுக:

    அவர்களின் பெயர்களாவன:

    1) ஹஸ்ரத் கதீஜா (ரலி) 2) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி)
    3) ஹஸ்ரத் சவ்தா (ரலி) 4) ஹஸ்ரத் ஹப்ஸா (ரலி)
    5) ஹஸ்ரத் ஸ.்.பியா (ரலி) 6) ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி)

7) ஹஸ்ரத் மைமூனா (ரலி)
8) ஹஸ்ரத் ஜைனப் (ரலி) (குஸைமாவின் மகள்)
9) ஹஸ்ரத் ஜைனப் (ரலி) (ஜஹஷின் மகள்)
10) ஹஸ்ரத் உம்மு ஹபீபா (ரலி)
11) ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி)
12) ஹஸ்ரத் உம்மு இப்ராஹீம் (ரலி)

14. ஒரு முஸ்லிம் ஏக காலத்தில் எத்தனை மனைவிகளைத் திருமணம் செய்யலாம்?

குறிப்பான சூழ்நிலைகள் இருந்தால் ஒருவர் ஏக காலத்தில் நான்கு மனைவிகள் வரை மணந்து கொள்ளலாம்.

15. ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மகள்களின் பெயர்களைக் கூறுக:

1) ஹஸ்ரத் ஜைனப் (ரலி)
(ஹஸ்ரத் அபுல் ஆஸ் பின் ரபி என்பவரது மனைவி)
2) ஹஸ்ரத் ருகைய்யா (ரலி)
(ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவி)
3) ஹஸ்ரத் உம்மு குல்தும்
(ஹஸ்ரத் ருகையா (ரலி)அவர்கள் இறந்த பின் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவியானவர்)
4) ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி)
(ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் மனைவி)

16. ஹஸ்ரத் முஹம்மது (ஸல) அவர்கனின் மகன்களின் பெயர்களைக் கூறுக:

ஹஸ்ரத் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களுக்கு நான்கு மகன்கள் இருந்தனர். அவர்களின் பெயர்கள்:

1) ஹஸ்ரத் காசிம் 2) ஹஸ்ரத் தாஹிர்
3) ஹஸ்ரத் தையப் (இவருக்கு 'அப்துல்லாஹ்' என்ற வேறு ஒரு பெயருமுண்டு)
4) ஹஸ்ரத் இப்ராஹீம் (இவர்களில் எவரும் நீண்ட நாள் வாழ்ந்திருக்கவில்லை).

17. முஹம்மது (ஸல்) அவர்களைப் பராமரித்த செவிலித் தாயின் பெயர் என்ன?

அவரது பெயர் ஹஸ்ரத் ஹலீமா சாதியா என்பதாகும்.

18. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது எந்த வயதில் முதல் இறையறிவிப்பைப் பெற்றார்கள்?

தமது: 40-வது வயதில் முதல் இறையறிவிப்பைப் பெற்றார்கள்.

19. முதன் முதலில் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டவர்கள் யாவர்?

ஆண்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், பெண்களுள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களும், சிறுவர்களில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும், அடிமைகளில் ஹஸ்ரத் ஸெய்து (ரலி) ஆகியோர் முதன் முதலில் இஸ்லாத்தை ஒப்புக்கொண்டோர் ஆவர்.

20. வரகா பின் நவ்ஃபல் என்பவர் யார்?

கிறித்துவப் பாதிரியாரான இவர் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார்.

21. இறை வெளிப்பாடு குறித்த செய்தியைக் கேட்டவுடன் வரகா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் என்ன கூறினார்?

வரகா அவர்கள், "நிச்சயமாக நபி மூஸா (அலை) அவர்கள் மீது இறங்கிய மலக்குதான் உங்கள் மீதும் இறங்கியுள்ளார். உங்களை நிச்சயமாக இந்த மக்கள் ஊர் நீக்கம் செய்வர். அப்போது நான் உங்களுடன் இருந்து உங்ளுக்கு உதவ வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று கூறினார்.

22. "இறைவன் எனது சாட்சியாக இருக்கிறான். நீங்கள் எனது வலப்புறத்தில் சூரியனையும், இடப்புறத்தில் சந்திரனையும் கொண்டு வந்து நிறுத்தினாலும், இறைவன் எந்த சத்தியத்தைப் போதிப்பதற்காக என்னை அனுப்பினானோ அதிலிருந்து நான் பின்வாங்கப் போவதில்லை" இதனை யார் எப்போது கூறினார்கள்?

மக்கா நகரத்திலுள்ள நிராகரிப்பவர்களின் வற்புறுத்துதல் காரணமாக ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரும் பாதுகாவலருமான ஹஸ்ரத் அபூதாலிப் அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களிடம், "தாங்கள் இந்த மக்கமா நகரத்திலுள்ள அனைத்துச் செல்வங்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் இந்தச் சிலைகளை மட்டும் திட்டுவதை விட்டு விடுங்கள்" என்று கூறியபோது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மேற்கூறியவாறு கூறினார்கள்.




23. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்திற்குச் சென்றதன் நோக்கம் என்ன?

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்கா நகரத்திலுள்ள மக்களிடம் தமது தூதுச் செய்தியை எடுத்துச் சொல்ல முடியாத அளவிற்கு அவர்களின் எதிர்ப்பு வலுப்பெற்று விட்டதால் மக்காவிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் தாயிப் என்ற நகரத்திற்குச் சென்று அங்குள்ள மக்களிடம் தமது தூதுச் செய்தியை எடுத்துரைக்கும் நோக்கத்தில் அங்கு சென்றார்கள்.

24. இந்தப் பிரயாணத்தின்போது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடன் சென்ற நபித்தோழர் யார்?

ஹஸ்ரத் ஸெய்து (ரலி) அவர்கள் உடன் சென்றார்கள்.

25. தாயிஃப் நகரத்து மக்களால் எவ்வாறு நடத்தப்பட்டார்கள்?

தாயிஃப் நகரத்து மக்கள் தூதுச் செய்தியை நிராகரித்தது மட்டுமின்றி பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கற்களை வீசியும் அவமதித்தும் அந்த நகரத்தை விட்டும் விரட்டினர். இதில் இருவரும் காயமடைந்தார்கள்.

(தொடரும்...)

# ஆதம் நபியின் சொர்க்கம்

திருக்குர்ஆன் சுவர்க்கத்தைப் பற்றிக் கூறும் இடங்களில், 'எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல் செய்கிறார்களோ அவர்கள் சதா நீரருவிகள் ஓடுகின்ற சுவர்க்கத்தில் இருப்பார்கள்' என்று கூறுகிறது. (திருக்குர்ஆன் 2:26, 2:83, 4:123, 7:43 ஆகிய வசனங்களைக் காண்க.)

திருக்குர்ஆன் 2:215–இல், "உங்களுக்கு முன்னர் சென்ற மக்களுடைய நிலைமை உங்களுக்கு வராமலிருக்கின்ற வரையில் நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடலாம் என நினைக்கிறீர்களா?" என்று இறைவன் கேட்கிறான்.

இவ்விரு அளவுகோல்களையும் ஆதம் நபியுடன் பொருத்திப் பார்ப்போம். ஆதம் நபி (அலை) அவர்கள் மறுமை சொர்க்கத்தில் படைக்கப்படுவதற்கு முன்பு, பூமியில் படைக்கப்பட்டு, நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் செய்து, பின்னர் மரணம் அடைந்து மறுமையில் கிடைக்கும் சொர்க்கம் சென்றார்களா? இல்லவே இல்லை. எனவே ஆதம் (அலை) அவர்கள் மறுமைச் சொர்க்கத்தில் படைக்கப்பட்டார் என்பது தவறாகும்.

இரண்டாவதாக, திருக்குர்ஆன் 2:215–இல் இறைவன் நம்மிடம், "உங்களுக்கு முன்னர் சென்ற மக்களுடைய நிலைமை உங்களுக்கு வராமலிருக்கின்ற வரையில் நீங்கள் சுவர்க்கத்தில் நுழைந்து விடலாம் என்று நினைக்கின்றீர்களா?" என்று கேட்கின்றான். அந்நிலைமை என்ன? "அவர்களுக்கு வறுமையும் இன்னல்களும் ஏற்பட்டன. (அப்போதைய) தூதரும் அவருடன் (உள்ள) நம்பிக்கை கொண்டிருந்தவர்களும் அல்லாஹ்வின் உதவி எப்போதும் வரும் என்று கேட்கும் வரை அவர்கள் மிகவும் ஆட்டிப்படைக்கப்பட்டார்கள்" (2:215) என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இந்த வசனம் கூறுகின்ற இலக்கணத்தின்படி ஆதம் நபியும் அவருடன் வாழ்ந்த நம்பிக்கையாளர்களும் இப்பூமியில் வாழ்ந்து, வறுமையில் வாடி, இன்னல்களுக்கு ஆளாகி, 'அல்லாஹ்வின் உதவி எப்போது வரும்?' என்று கேட்கும் வரை மிகவும் ஆட்டிப்படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அப்படி ஏதும் நடக்காத வரை அல்லாஹ் யாருக்கும் சொர்க்கத்தைக் கொடுக்க மாட்டான். இந்த அளவுகோலின்படி ஆதம் நபி மறுமைச் சொர்க்கத்தில் படைக்கப்பட்டார் என்பது தவறு என்று தெரிகிறது. இதனால்தான் திருக்குர்ஆனில் இறைவன், 'பூமியில் என் கலீஃபாவை ஏற்படுத்தப் போகிறேன்' என்று (2:31) கூறுகிறான். அவன் பூமியில் நியமித்த ஆதம் நபி (அலை) அவர்களை சுவர்க்கத்திற்கு உயர்த்தினான் என்று எங்கும் கூறவில்லை.



திருக்குர்ஆனில் 'ஜன்னத்' என்னும் சொல் பூமியிலுள்ள தோட்டங்களையும், மறுமைச் சொர்க்கத்தையும் குறிக்க வருகிறது. எனவேதான் 'ஆதமே! நீரும் உம் மனைவியும் இந்த ஜன்னத்தில் குடியிருங்கள்' (2:36) என்று கூறுகிறான். ஆதம் நபியுடன் வரும் ஜன்னத் மறுமைச் சொர்க்கம் அன்று. ஹூது சமுதாயம் வாழ்ந்த இடம் ஜன்னத் என்று திருக்குர்ஆன் 26:135–இல் கூறுகிறது.

சாலிஹ் நபியின் சமுதாயம் வாழ்ந்தது ஒரு ஜன்னத் என்று (26:148) திருக்குர்ஆன் கூறுகிறது. இவ்வாறே ஆதம் நபி (அலை) வாழ்ந்த இடமும் ஒரு ஜன்னத் என்று கூறப்பட்டுள்ளது. எனவே ஆதம் நபி (அலை) வாழ்ந்தது பூமியிலுள்ள சுவர்க்கம் ஆகும்.

திருக்குர்ஆன் மறுமைச் சொர்க்கத்தைப் பற்றிக் கூறுமிடத்து, 'அதிலிருந்து யாரும் வெளியேற்றப்படமாட்டார்கள்' (15:49) என்று கூறுகிறது. ஆனால் ஆதமும் அவருடன் வாழ்ந்தவர்களும், 'நீங்கள் இங்கிருந்து வெளியேறி விடுங்கள்' (2:37) என்று கூறப்பட்டதாகத் திருக்குர்ஆன் கூறுகிறது. இவ்வாறே, 'பிர்அவ்னையும் அவன் கூட்டத்தாரையும் சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றி விட்டோம்' (26:58) என்று திருக்குர்ஆன் கூறுகிறது. எனவே ஆதம் நபியும் அவருடன் இருந்தவர்களும் வெளியேற்றப்பட்டது பூமியிலுள்ள ஒரு ஜன்னத் என்றும், மறுமை ஜன்னத் இல்லை என்றும் உறுதியாகிறது. மேலும் மறுமை ஜன்னத்தைப் பற்றி, 'சுவர்க்கத்தில் நுழையுங்கள்' என்றுதான் வருகிறது. (3:186, 14:24, 5:66, 40:9, 43:71, 89:31) வெளியேறு என்று எங்கும் வரவில்லை.

கடைசியாக ஒரு கேள்வி: ஆதம் நபி வாழ்ந்தது மறுமை சொர்க்கம் என்றால், இப்லீஸுக்கும் ஷெய்த்தானுக்கும் அங்கு என்ன வேலை? நல்ல நம்பிக்கையும் நல்ல செயலும் இல்லாதவனும் சொர்க்கத்தில் நுழைந்து விடலாம் என்பதுதான் உங்கள் ஈமானா? திருக்குர்ஆனில் இப்லீஸைப் பற்றி ஆதம் நபியுடன் வருமிடங்கள் எல்லாவற்றிலும் 'அவன் மறுப்புத் தெரிவித்து இறுமாப்புடன் நடந்து கொண்டான். அவன் நிராகரிப்பவர்களைச் சேர்ந்தவனாக இருந்தான்' (2:35) என்றும், ஆதம் நபியுடன் ஷெய்த்தான் வரும் இடங்களில், 'அவன் அவர்கள் இருந்த நிலையிலிருந்து அவர்களை வெளியாக்கி விட்டான்' (2:37) என்றுதான் வருகிறது. இவ்வாறு கீழ்ப்படிய மறுப்பவனும், வழிகெடுப்பவனும் மறுமைச் சொர்க்கத்தில் வாழ்வான் என்பதுதான் உங்கள் நம்பிக்கையா?

ஆதம் நபியுடன் இப்லீஸும் ஷெய்த்தானும் ஜன்னத்தில் வாழ்ந்ததாக திருக்குர்ஆன் கூறுவதால் ஆதம் நபி வாழ்ந்தது மறுமைச் சொர்க்கம் இல்லை என்பது தெளிவாகிறது.

**A.P.Y. அப்துல் காதிர்**

*(14 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மரணமடைவார். திருமண நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் பெண்ணின் தந்தையும் மரணமடைவார் எனும் முன்னறிவிப்பைப் பெற்றார்கள். இது தொடர்பாக மேலும் சில இறையறிவிப்புகளையும் பெற்றார்கள்.

இந்த இறையறிவிப்பைப் பற்றி மிர்ஸா அஹ்மது பேக்கிடம் தெரிவிக்கும் போதே இது முற்றிலும் தனிப்பட்ட விஷயம்; இந்த விபரங்களை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு கடிதம் எழுதி இருந்தார்கள். அவ்வாறு கேட்டுக் கொண்டதற்கு உண்மையான காரணம், மிர்ஸா அஹ்மது பேக்கின் மரணம் பற்றிய செய்தி வெளியில் வராமல் இருக்க வேண்டும் என்பதேயாகும். இந்த விஷயத்தைப் பற்றி அவரிடம் தெரிவிக்க ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தயங்கினார்கள். ஆனால் மிர்ஸா அஹ்மது பேக் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்கவே இந்த முன்னறிவிப்பைப் பற்றிக் கூறினார்கள். மிர்ஸா அஹ்மது பேக் உடனடியாகத் தமது நெருங்கிய உறவினர்களும்,


முபாரக் மஸ்ஜிது, காதியான்

நண்பர்களுமான மிர்ஸா நிஸாம் தீன், மிர்ஸா இமாம் தீன் போன்றவர்களுக்கு இந்தத் தகவலைக் கூறி விட்டார். அவர்களோ ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை இழிவுபடுத்தும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தவர்கள் ஆவர். அவர்கள் இந்தக் கடிதத்தை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் எதிரிகளாக விளங்கியவர்களுக்கும், பாதிரிகளுக்கும் காண்பித்தார்கள். இவ்வாறு, ஒரு தனிப்பட்ட மனிதருக்கு எழுதப்பட்ட கடிதம் 'நூர் அஃப்ஷான்' பத்திரிகையில் பெயர் எதுவும் குறிப்பிடாமல் 10.5.1888 அன்று பிரசுரமானது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மீது மிகவும் கடுமையான ஆட்சேபணைகள் எழுந்தன. (லாஹூரிலிருந்து வெளியான 'ஆர்ய பத்ரிகா' எனும் பத்திரிகையின் 12.6.1888 இதழைப் பார்க்கவும்.)

இந்த மோசடியான குற்றச்சாட்டுகளை மறுப்பதற்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 1888–ஆம் ஆண்டு ஜூலை 10–ஆம் தேதியும், 15–ஆம் தேதியும் இரண்டு பிரசுரங்களை வெளியிட்டார்கள். அவற்றில் இந்தப் பிரச்சினை தொடர்பான மேலும் சில விபரங்களையும் தெரிவித்திருந்தார்கள்.

முன்னறிவிப்பின் இந்தப் பகுதி நீண்ட காலத்திற்கு முன்பே, அதாவது 1886–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பீ. இலாஹி பக்ஷ், ஜிஹ்லத்தைச் சேர்ந்த மவ்லவி புர்ஹானுத்தீன் (ரலி) ஆகியோர் முன்னிலையில் மிர்ஸா அஹ்மது பேக்கிற்குத் தெரியப்படுத்தப் –பட்டது. தமக்கு ஏற்கனவே மனைவியும், குழந்தைகளும் இருக்கின்றனர். எனவே அந்தப் பெண்ணை மணந்து கொள்வதில் தம்முடைய விருப்பத்தின் பேரில் ஆர்வம் இல்லை என்பதை அந்தப் பிரசுரங்களில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தெளிவுபடுத்தியிருந்தார்கள். 20.06.1886 அன்று மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் திருமணம் பற்றிய அந்த இறையறிவிப்பு வந்ததிலிருந்து தமது மனநிலை எவ்வாறு இருந்தது என்பதை கீழ்வருமாறு விவரிக்கின்றார்கள்:

“நான் பதற்றமாகவும், முடிவெடுக்க முடியாத நிலையிலும் அந்த இறை கட்டளையிலிருந்து விலகி இருக்க வேறு வழியின்றியும் இருந்தேன். இயல்பாகவே நான் தயக்க குணமுடையவன். ஆரம்பத்தில் ஒவ்வொரு முறை இந்த இறையறிவிப்பு வரும்போதும் இந்த இறை தீர்ப்பு தவிர்க்க முடியாதது என்பதையே காட்டுகின்றன. ஆனால் நான் முடிவெடுத்து விட்டேன். அந்தச் சந்தர்ப்பம் எவ்வளவு கடுமையானதாக இருந்த போதிலும், இறைவனின் குறிப்பான கட்டளையின் மூலம் நான் கட்டாயப்படுத்தப்படாவிட்டால் அதிலிருந்து தவிர்ந்து கொள்ளவே விரும்புகிறேன். ஏனென்றால், பலதார மணத்தின் சுமைகளும், பொறுப்புகளும் மிகவும் அதிகம். அதில் பல சிக்கல்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களை மட்டும்தான் இறைவன் தனது சிறப்பான தீர்ப்பு மூலம் ஒரு சிறப்பான நோக்கத்திற்காக தனிப்பட்ட தொடர்புகள் மூலமாகவும், இறையறிவிப்புகள் மூலமாகவும் அந்த அதிகமான பாரத்தைச் சுமக்கும்படிச் செய்கின்றான்.”

எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இறை கட்டளைக்குக் கட்டுப்பட்டே அந்த கோரிக்கையை முன் வைத்தார்கள் என்பது தெளிவாகிறது. அதன் உண்மையான நோக்கம் இறை அடையாளத்தை காட்டும்படித் தொடர்ந்து கேட்டு வந்த அன்னாரது உறவினர்களுக்கும், பங்காளிகளுக்கும் ஓர் இறை அடையாளம் காட்டப்பட வேண்டும் என்பதாகவே இருந்தது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களே இந்நிகழ்ச்சியைப் பற்றிப் பின்வருமாறு எழுதினார்கள்:

“இது இறைவன் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருக்கும் உறவினர்களுக்கு இறை வல்லமையை எடுத்துக் காட்டும் ஓர் அடையாளமேயாகும். அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றால், அது அவர்களுக்கு கருணை, அருள் ஆகியவற்றின் ஊற்றாக அமையும். வரவிருக்கும் ஆபத்துகளிலிருந்து அவர்கள் காப்பாற்றப்படுவர். அவர்கள் மறுப்பார்கள் என்றால் இறைவன் கோபத்தை பயங்கரமான விதத்தில் வெளியிடுவான்.”

இந்த முன்னறிவிப்பு நிறைவேறிய விதம் பற்றிப் பின்னர் விவரிக்கப்படும்.

(தொடரும்...)

# ஸக்காத்

2.5% ZAKAT



நகைகளின் ஸக்காத் பற்றி வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

“எந்த நகை அணியப்படுகிறதோ, எப்போதாவது ஏழை பெண்களுக்குப் பயன்படுத்துவதற்காக வழங்கப்படுகிறதோ அதற்கு எந்த ஸகாத்தும் இல்லை என்பது சிலருடைய மார்க்கத் தீர்ப்பாகும். எந்த நகை அணியப்படுகிறதோ, மற்றவர்களுக்குப் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கப்படுவதில்லையோ அதற்கு ஸகாத் கொடுப்பது சிறந்ததாகும். ஏனெனில் அது தமக்காகப் பயன்படுகிறது. இதன்படியே எங்கள் வீட்டில் செயல்படுகிறோம். ஒவ்வோர் ஆண்டிற்குப் பிறகு, இருக்கின்ற நகைகளுக்கு நாங்கள் ஸகாத் கொடுக்கின்றோம். எந்த நகை பணத்தைப் போன்று சேமித்து வைக்கப்படுகின்றதோ அதற்கு ஸகாத் உண்டு என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.” (அல் ஹகம் 17.11.1905 பக்கம் 11)

சய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “நினைவில் கொள்ள வேண்டும்! ஸகாத் என்று அழைக்கப்படுகின்ற இந்த வரி, வருமானத்தின் அடிப்படையில் இருப்பதில்லை. மாறாக மூலதனம், இலாபம் ஆகிய அனைத்தையும் சேர்த்து அதில் கணக்கிடப்படுகிறது. இவ்வாறு 2.5% என்பது உண்மையில் சில நேரத்தில் இலாபத்தில் 50% ஆகி விடுகிறது.”

(அஹ்மதிய்யத் எஃனீ ஹகீகீ இஸ்லாம். அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 306)

எவரிடம் 52.5 தோலா (612 கிராம்) வெள்ளி இருக்கிறதோ அது ஓராண்டு வரை அவரிடம் இருந்தால், அதற்கு 1/40 அதாவது 2.5% ஸகாத் கொடுப்பது கடமையாகும்.

அவ்வாறே எவரிடம் 7.5 தோலா (87 கிராம்) தங்கம் இருக்கிறதோ அல்லது அதற்கு நிகரான ரொக்கப் பணம் இருக்கிறதோ அது ஓராண்டு வரை அவரிடம் இருந்தால், அதற்கும் அவர் 1/40 அதாவது 2.5% ஸகாத் கொடுப்பது கடமையாகும்.